Registered No. M. 878

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 7 } 1916-ம் வருஷம் மேமீ நளவருஷம் சித்திரைமீ { பகுதி 1

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L., F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.

## (CONTENTS.)

பக்கம்.

1. தற்கால நிலைமை.—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 1
(From the Front)—R. Rangaswamy Iyer.

2. குருக்களும் சிஷ்யர்களும்—C. W. லெட்பீடர் 10
Masters & pupils—C. W. Lead beater

3. உதயதிசை நக்ஷத்ர சங்கம்—ஓர் மெம்பர் 14
Order of the Star in the East—A Member

4. பரோபகாரம்—ஆர். பஞ்சாபகேச ஐயர், 15
Service—R. Panchapagesier

5. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் M. A. 23
Meerabai—R. Sreenivasa Iyer, M. A.

6. கைங்கர்யப் பேச்சு மாத்திரம் போதாது
வி. அருணாசலம் 27
Uselessness of Empty speech
V. Arunachalam

7. கல்வி கற்பித்தல் ஒரு கைங்கர்யம்
யம். ஸ்வாமிநாதையர் 33
Education as Service—M. Swaminathier

# பூர்ணசந்திரோதயம்.


தொகுதி 7 — 1916-ம் ௵ மே ௴ — நள ௵ சித்திரை ௴ — பகுதி 1


## தற்கால நிலைமை.

நாளிது எப்பிரல் ௴ 4உயன்று மாலை 4-30 மணிக்கு லார்டு ஹார்டிங் இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அன்று மாலை 5-45 மணிக்கு மாட்சிமை தங்கிய நமது சக்கரவர்த்தியவர்களால் புது ராஜப் பிரதிநிதியாய் நியமிக்கப்பட்ட லார்டு செம்ஸ் போர்டு என்ற பிரபு அந்த மஹோந்நத பதவியின் உத்தரவாதத்தை பம்பாய் நகரத்தில் ஏற்றுக்கொண்டார்.

***

பிரிடிஷ் ராஜாங்கம் முழுவதிலும் ஒப்புயர்வற்றதான ராஜப் பிரதிநிதி பதவியில் சென்ற 5½ வருஷ காலமாய் அமர்ந்திருந்து, அதை நமது சக்கரவர்த்திக்கும் இந்தியர்கட்கும் ஒருங்கே திருப்தி தரும்படி வஹித்துவந்த ஹார்டிங் பிரபுவை விட்டுப் பிரிய மனமாற்றாமல் இந்திய ராஜாக்களும் பிரபுக்களும் மற்ற ஜனங்களும் தங்களுடைய விசு

வாசத்தையும், அன்பையும் நன்றியறிதலையும் பலவாருக வெளியிட்டார்கள். பற்பல நகரங்களிலிருந்து வந்தஉபசாரப் பத்திரிகைகள் அளிக்கப் பெற்றன. சென்ற சில மாதங்களாகவே பல வேறு சபைகளிலும் நகரங்களிலும் ஹார்டிங் பிரபுவை உபசரித்தபொழுது அப்பிரபு தாம் இந்தியாவில் கொண்ட மெய்யன்பையும் இந்தியர் மேம்பாட்டையும் வண்ணம் தாம் எடுத்த முயற்சிகளையும் எடுத்துரைத்தார். பம்பாய் யூனிவர்ஸிடியில் அந்த பிரபுவுக்கு எல். எல். டி. என்ற உயர்தர விருதை அளித்தார்கள். அந்த மஹானும் இந்தியாவை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் ஏங்கினர்.

***

இவ்வாறு இந்த வொரு ராஜப்பிரதிநிதியிடம் நிகரற்றமரியாதையும்உபசாரமும் அன்பும் இந்தியரனைவரும் காட்டக் காரணம் என்ன? ஏனைய ராஜப்பிரதிநிதிகள் நமநாட்டை விட்டு ஏகும்போது இத்தகைய அந்தரங்கமான அன்பை நம்மவர் காட்டவில்லையே, அதன் காரணம் யாது? இதற்கு ஹார்டிங் பிரபுவே உத்தரமளித்திருக்கிறார். "ராஜப்பிரதிநிதி வேலையை ஒருசிறிது திருப்திகரமாய் வகித்ததாய்ச்சொல்லக் கூடுமாளுலதற்கு காரணம் இதுவே. நான் இந்தியாவை நம்பினேன். இந்தியரின் சுகம், துக்கம், கவலை, உற்சாகம், ஆசை, இவைகளை எனதாகப் பாவித்தேன். என்னையும் இந்தியனைப் போல் பாவித்தேன். அத்தகைய அன்புக்கு மாருக இந்தியர்கள் என்பால் எத்துணையோ பன்மடங்கு அதிக அன்பை வெளியிட்டார்கள். அது மிக்க ஆச்சரியமானது. இந்தியா தன் ஹிருதயத்தையே என்னிடம் ஒப்புவித்ததென்னலாம் "அன்பு அன்பையே பயக்கும் என்பது பிரகிருதி விதியன்றே? லார்டு செம்ஸ்போர்டும் லார்டு ஹார்டிங் போன வழியே பின்பற்றுவதாய் வாக்களித்திருக்கிருர். அங்ஙனம் செய்யின் இந்தியாவுக்கும் பிரிடிஷ் ராஜாங்கத்துக்கும் நன்மையே யுண்டாம்.

இங்கிலாந்துக்குப் போன பிறகும் இந்தியாவின் நன்மையை மனதில்வைத்து அதற்காகப் பாடுபடுவதாயும், இந்தியா எல்லாப் பிரகாரங்களிலும் அதிசீக்கிரம் அபிவிருத்தியடைந்து வருகிறதாயும், அதற்கேற்ப வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது அவசியம் என்றும், தன்னுட்டாருக்குத் தெரிவிப்பதாயும் ஹார்டிங் பிரபு வாக்களித்தார். தென் ஆப்பிரிக்காவில் அத்தேசத்தார் இந்தியர்களை மிகக் கொடுமையாய் அடிமைகள்போல நடத்தி வந்தார்கள். இந்தியா முழுதும் அந்த நடத்தையை ஓரே மனதாய் ஆக்ஷேபித்து, இந்தியர்களை பிரிடிஷ் பிரஜைகளுக்குரிய மரியாதையுடன் நடத்தவேண்டும் என்று நாடெல்லாம் மஹாநாடுகள் கூடித் தீர்மானங்களை வெளியிட்டு, இமயம் முதல் குமரிவரை அலங்கோலமாயும் கொந்தளிப்பாயும் இருந்த சமயத்தில் இந்தியர்கள் கக்ஷியை ஆதரித்து, அச்சமற்று கம்பீரமாய் மதராஸில் தென் ஆபிரிக்கா கவர்ன்மெண்டாரைக் கண்டித்துப்பேசிய தீரனல்லவோ இந்த ஹார்டிங் பிரபு? அதுமுதல் இதர தேசங்களுக்கு இந்தியர்களை ஒப்பந்தத்தின்மேல் கூலியாட்களாய் அனுப்பும் வழக்கத்தை முற்றிலும் நிறுத்தவேண்டும் என்ற தீர்மானமானது நம்மவர்கள் மனத்தில் திடப்பட்டு வந்தது. சில காலத்துக்குமுன ரவீந்திரநாத் டாகூருடைய அபிமானிகளும், நம்மாத்ருபூமியின் மேம்பாட்டைக் கருதியவர்களுமான சி. எப். ஆண்ட்ரூஸ், பியர்சன் என்ற இரண்டு கிரீஸ்தவ சிகாமணிகள் இந்தியர்கள் கூலிகளாய்ப் போவது யாது காரணம் பற்றி, அவர்கள் குடியேற்ற நாடுகளில் என்ன ஸ்திதியிலிருக்கின்றார்கள் என்று நேரில் விசாரித்து பின்னர் தாங்கள் பெற்ற ஸாக்ஷ்யங்களையும் தங்கள் அபிப்பிராயத்தையும் அறிக்கைப் பத்திரம் மூலமாய் வெளியிட்டார்கள். அறிவில்லாத புருஷர்களும் ஸ்திரீகளும் மோசக் கங்காணிகளுடைய மாயங்களால் ஏமாற்றப்பட்டு, பிற நாட்டில் தாங்கள் ஏதோ அதிசிலாக்கியமான லாபத்தை அடையப்போகிறோம் என்று எண்ணிக் கங்காணிகள் வலையில் சிக்கிவிடுகிறார்கள் என்றும், அப்படி சிக்கியபிறகு கூலி

க்கிடங்குகளிலேயே பத்திரமாய் ஒளிக்கப்பட்டு, இந்தியாவை விட்டுப் பிறநாடுகளில் கூலிகள் படும் கஷ்டங்களித் தகையனவென்றும், அநேக புருஷர்களுக்கு மத்தியில் சில ஸ்திரீகள் மட்டுமிருப்பதால் ஒருவருக்கொருவர் பொறாமையும் சச்சரவும் ஏற்படுகிறதென்றும், அநேகம் பேர்களதனால் தற்கொலை புரிகிறார்களென்றும், ஸ்திரீகளும் கற்பழிகிறார்கள் என்றும், இந்தியர்கள் கூலிகளாயமர்வதால் இந்தியர்களுக்கே மரியாதை யில்லாமல் போவதாயும் தெரியவருகிறது. இத்தகைய கூலி ஏற்பாட்டை ஒழிக்கவேண்டுமென்று பண்டித மதனமோஹன மாளவய்யா இந்தியா சட்ட நிருபண சபையில் ஹார்டிங் பிரபுவால் கடைசியாய் நடத்தப்பட்ட கூட்டத்தில், பிரேரேபிக்க அந்த பிரேரேபணையை ஹார்டிங் பிரபுவே அங்கீகரித்தார். முன்னொருக்கால், ஸ்ரீ கோகலே இவ்விஷயத்தைப்பற்றி அச்சபையில் பேசியது முதல் இந்தியாவுக்கு இத்தகைய அகௌரவம் விளைக்கும் இந்த துர்வழக்கத்தை நிறுத்திவிடவேண்டும் என்று எண்ணங்கொண்டு அதைப்பற்றி இங்கிலாந்தில் இந்தியா மந்திரியவர்கட்கு நிருபம் எழுதியதாயும், அதற்கு அவரும் இணங்கி மறுமொழி யனுப்பியதாயும். இனிமேல் கூடிய சீக்கிரம், அந்தக்கெட்ட வழக்கம், முற்றிலும் நின்றுபோய்விடும் என்றும் அந்தச் சபையிலும் மற்றவிடத்திலும் உள்ள இந்தியர்கள் மனங் குளிர உரைத்தார் அப்பிரபு.

***

தற்காலத்தில் ஐரோப்பாவிலும் மற்றக்கண்டங்களிலும் நடந்துவரும் பெரும் யுத்தத்திற்கு நம்மிந்தியச் சேனையையனுப்பி, இந்தியர்களின் ராஜவிசுவாசத்தையும், இந்தியாவில் தாம்கொண்ட நன்னம்பிக்கையையும் வெளியிட்ட மஹானல்லவோ இந்தப் பிரபு? பிரான்சிலும் துருக்கியைச்சேர்ந்த காலிப்போலியிலும், ஓரேயிடத்தில் பக்கத்தில் நின்று போர் புரிந்ததால் இங்கிலீஷ்காரருடையவும் மற்ற குடியேற்ற நாட்டு சைன்யங்களுடையவும் கௌரவத்துக்கும் மெய்யன்புக்கும் இந்தியர்கள் பாத்திரர்களானார்கள்

இனிமேல் இந்தியர்களுக்கு நாகரிக மில்லையென்று இகழ மாட்டார்கள். யுத்தத்தின் முடிவில் பிரிட்டிஷ்ராஜாங்கத்தைச் சேர்ந்த சகல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கூடி நடை பெறப்போகிற இம்பீரியல் கான்பெரன்ஸ் என்ற மஹாசபையில் இந்தியப் பிரதிநிதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்தியா சட்ட நிருபண சபையில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அந்த தீர்மானத்தை அங்கீகரித்ததும் லார்டு ஹார்டிங் தான். இவ்வாறு இன்னும் எத்தனையோ முறைகளில், நம்மாத்ருபூமியின் பெருமையை அதிகரிப்பதில் மிக்க ஊக்கமுள்ளவராயிருந்தார். ஆகையால் இந்தியர்கள் அனைவரும் இந்தப்பிரபு நெடுநாள் ஜீவித்திருந்து இந்தியாவுக்கு மேன்மேலும் உதவிபுரிய வேண்டுமென்று கடவுளை வழிபடுகிறார்கள்.

***

பிரிட்டிஷ் இந்தியாவில் இந்தியர்கள் வாலண்டியர் படையென்ற சம்பளமில்லாத யுத்தவீரப்படையாகச் சேர்பிக்க ஆவலுள்ளவர்களாயிருந்தும் துரைத்தனத்தார் அதற்கு அநுமதி கொடுக்கவில்லை யாதலால் ஜனங்கள் நம்நாட்டைக் காப்பாற்றும் பாக்கியம் நமக்கில்லையே. இதரர் காப்பாற்ற நாம் பேடிபோலிருக்கிறேமே யென்று ஏக்கமுற்றிருந்தார்கள். சம்பளத்துடன் சேரும் படையிலும் இந்தியன் ஒருவன் எத்தகைய வீரனாயினும் குறிப்பிட்ட உத்யோகத்துக்குமேல் போகமுடியாது. சில நாளைக்குமுன்னே "யூரேஷியர்" என்ற ஜாதியாருக்குமட்டும் மேற்கண்ட தடங்கல்களை நிவர்த்திசெய்ய கவர்ண்மெண்டார் மனமிரங்கினார்கள். அந்த ஜாதியார்களுக்குள் மிக்க உற்சாகத்துடன் யுத்தத்திற்கு தயார் செய்வதற்காக "வாலண்டியர்கள்" சேர்த்து கொண்டிருக்கிறார்கள். மற்ற இந்தியர்களும் இந்த சந்தோஷ சமாசாரத்தால் மனம் பூரித்தவர்களாய் சீக்கிரத்திலும் அவர்களுக்குவாய்த்த நற்காலம நமக்கும் வாய்க்கும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். புதுச்சேரி சந்திரநாகூர் முதலிய (பிரான்சு தேசத்துக்குச் சேர்ந்த) பிரான்சு

இந்தியாவில் இந்தியருக்கும் ஐரோப்பியருக்கும் யாதொரு வித்யாசமும் இன்றி படையில்சேர்த்துக்கொள்வதாகப் பிரசுரம் செய்ததால் இந்தியர்கள் பலர் அந்த சைன்யத்தில் சில நாளுக்கு முன்னர் சேர்ந்தார்கள். சந்திர நாகூரில் பங்காள வாலிபர்கள் பலர் வெகு உற்சாகத்துடனும் பங்காளசிரேஷ்டர்களுடைய ஆசீர்வாதத்துடனும் படையைச் சேர்ந்தார்கள். அவர்களைக் கண்ட எல்லோரும் ஏகோபித்து ஆரவாரித்ததைப் பார்த்த எல்லாருடைய மனமும் பூரித்தது. இத்தகைய இரண்டு சூசகங்களும் பிரிட்டிஷ் இந்தியாவிலும் இக்கௌரவத்தை இந்தியர்களுக்கு சீக்கிரம் கொடுப்பார்கள் என்று காட்டுகின்றன.

***

சர்வ நியந்தாவாகிற ஸர்வேசுவரனால் ஆளப்பட்ட இவ்வுலகில் நிகழும் சகல சம்பவங்களும் தாறுமாறாய்த் தோன்றினபடி நடப்பவைகள் அல்ல. ஈசுவரன் மனதில்கொண்ட சங்கற்பத்தின்படியே யாவும் நடைபெறுகின்றன. "அவனன்றி யோரணுவு மசையாது கண்டாய்" என்ற வாக்கியம் உண்மையென்று ஆராயுங்கால் ஒவ்வொருவருக்கும் திண்ணமாய்த் தெரிகின்றது. இவ்வுலகில் முற்றிலும் கெட்டது என்று ஒன்றும் கிடையாது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினந்தோறும் உயிர்நீக்கக் காரணமான இந்தப் பெரும் போர் நல்லது என்று யார்தான் சொல்லத் துணிவார்கள்? ஆனால் உற்று நோக்குவோம். இஹலோகமே சத்யம் பரலோகமில்லை, காண்பதே காட்சி, உண்பதே மிச்சம் என்று பெரும்பான்மையோர் எண்ணியிருந்த மேனாட்டில் இப்போது கடவுள், தேவதைகள், புவர்லோகம் இவைகளை பெரும்பான்மையார் நம்புவது இந்த யுத்தத்தாலன்றோ? இன்னும் மனிதர்களுடைய நோக்கங்களில் பல முக்கியமான வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் இந்தியாவின் அந்தக்கரணத்தை வெளியிட்டு அதன் ராஜவிசுவாசத்தாலும் இந்திய ராஜாக்களுடையவும் பிரபுக்களுடையவும் ஔதார்யத்தாலும் ஆங்கிலர்களுடைய மனதில் இந்திய

மிடத்தில் கௌரவத்தை உண்டுபண்ணினது இந்த யுத்த மல்லவா? அதினாலல்லவோ இங்கிலாந்திலுள்ள தீர்க்க திருஷ்டியுள்ள அறிவாளிகள் யுத்தத்தின் முடிவில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள சம்பந்தத்தை சீர்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகையால் இப்பெரும்போரும் சில நன்மையைப் பயக்குகின்றது என்பது உண்மையே.

***

எப்பிரல்மீ 21உ முதல் 24உ வரை அடையாற்றில் தென்இந்திய கன்வென்ஷன் என்ற மஹாசபை கூடிற்று. 250 அங்கத்தினர் தென் இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து வந்து சேர்ந்தார்கள். சப் ஜட்ஜ் அவதானுலு அவர்கள் பாகவதத்தைப் பற்றியும், நமது பத்திராசிரியர் அவர்கள் தமிழ் கிரந்தங்களில் ப்ரஹ்மக்ஞான தத்வம் என்ற விஷயத்தைப்பற்றியும் முறையே தெலுங்கிலும் தமிழிலும் 4 நாட்களும் பிரசங்கித்தார்கள். இது புதிய ஏற்பாடு. ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் அவர்கள் "ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் சம்பந்தத்"தைப் பற்றி அழகாகப் பேசினார். ஜினராஜதாசரவர்கள் இங்கிலாந்துக்கு புறப்படுகிறார்கள். இங்கிலாந்தின் லாபம் நமது நஷ்டமே. ஆனால் கூடியசீக்கிரம் அடையாற்றுக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கிறோம்.

***

தக்ஷசிலை என்ற புராதன க்ஷேத்திரத்தில் பூமியை வெட்டிப்பார்த்ததில் ஒரு இடத்தில் பகவான் புத்தருடைய சரீரசின்னங்கள்சில எடுக்கப்பட்டன. முக்கியமாய் பௌத்தமதஸ்தர்களாலும் பொதுவாய் சகலராலும் புத்த பகவானுடைய சரீர அம்சங்கள் மிக்க பரிசுத்தமானவையாயும் பூஜார்ஹமாகவும் சுற்றியிருக்கும் இடத்தையே புனிதப்படுத்தக்கூடியவையாய்க் கருதப் படுகின்றன. பகவான் புத்தர் வடஇந்தியாவில் கௌதமராய்ப் பிறந்து பின்னர் புத்தரானார். அதன் பின்னர் 40 வருஷகாலம் சன்யாசி

யாய் நாடெங்கும் சஞ்சரித்து தத்வோபதேசம் செய்து ஜனங்களுடைய வாழ்வைப் பரிசுத்தமாக்கினர். அவரை இந்துக்கள் மஹாவிஷ்ணுவின் 9-வது அவதாரமாகப் பூஜிக்கிறார்கள். பரமகருணாநிதியாகிய புத்தர் அவதரித்த இந்த நாட்டில் அவரைக் கொண்டாடும் கோவில் இல்லையென்றால் அது விசனிக்கத்தக்கதே. முன்னர் ஒருக்கால் புத்த பகவானுடைய தேஹாம்சம் இம்மாதிரி கிடைத்ததில் சர்க்காரால் பர்மா தேசத்தவருக்கு அதை அர்ப்பணம் செய்யப்பட்டது, ஆனால் இப்போது கிடைத்த பரிசுத்தமான சரீராம்சத்தை இந்தியாவிலேயே வைத்துப்பாலிக்கவேண்டுமென்று ஜனங்களுக்கு எண்ணமிருக்கின்றது. அதற்கிசைய கல்கத்தாவில் மஹாபோதி சபையார் தாங்கள் கல்கத்தாவில் பிரஹ்மக்ஞான சபைக்கு சமீபத்தில் ஒருவிஹாரம் இயற்றி அதில் அந்த சரீராம்சத்தை வைத்து பூஜை செய்வதாகவும் அதற்கு அநுமதி கொடுக்கும்படிக்கும் வங்காள கவர்னர் மூலமாய் இந்தியா கவர்ன்மெண்டுக்கு மனுச்செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அநுமதி கொடுக்கவேண்டியது மிக்கநியாயமே. மேற்கண்ட விஹாரம் கட்ட இந்துக்கள் பௌத்தர்கள் எல்லோரும் தங்களாலியன்ற பொருளுதவியை மனமுவந்து செய்யவேண்டும். அங்ஙனம் செய்யின் நம் நாடு பெருமையும் சுகிர்தமும் பெறும்.

***

லாகூரில் ஸநாதநதர்ம காலேஜ் ஒன்று காச்மீர மஹாராஜா அவர்களுடையவும் தர்பங்கா மஹாராஜா அவர்களுடையவும் சில இதர பிரபுக்களுடையவும் பொருளுதவியால் சிலகாலத்துக்குமுன்னர் ஸ்தாபிக்கப்பெற்றது. முதலில் அதை பஞ்சாப் யூனிவர்சிடியில் சேர்த்துக் கொள்ள கொஞ்சம் ஆக்ஷேபணைகள் ஏற்பட்டன. ஆனால் இப்போது பி. ஏ. பரீக்ஷை வகுப்புவரை கற்பிக்க அநுமதியுடன் அந்த சர்வகலாசாலையில் சேர்த்துக்கொண்டார்

கள். இது சந்தோஷகரமான செய்தி. தலைமை உபாத்தியாயர் வேலையையும் புரொபசர் ராமயாசாத் கோசலா என்ற ஒருவருக்குக் கொடுப்பதாக உத்தேசமாம்.

***

மைசூரில் சர்வகலாசாலை ஏற்படுத்துவதாக திட்டம் செய்யப்பட்டு வெகுசுறுசுறுப்பாய் வேலைநடந்துவருகிறது. ராஜாங்க பாஷையாகிய கன்னடத்துக்கு இங்கிலீஷைப் போல கௌரவம் கொடுப்பதாகத் தீர்மானம் என்று கேட்க சந்தோஷமடைகிறோம். மைசூர் மஹாராஜா அவர்களும் அவர் சகோதரர் யுவராஜா அவர்களும் திவான் விசுவேசுவரய்யா அவர்களும் தேசக்ஷேமத்தை மிக்க கவனமாய்க் கருதுகிறவர்கள். தற்போது பிரிட்டிஷ் இந்தியாவில்கூட முடியாதென்று சொல்லப்பட்ட காரியங்களையெல்லாம்சாதிக்கத் திறமையுள்ளவர்களாக விருக்கிறார்கள். சம்பளமில்லாமல் மூலாதாரப்படிப்பை எல்லோரும் அடையும் வண்ணம் ஏற்பாடு செய்து படியாதவர்கள் தண்டிக்கப் படுவார்களென்று சட்டம் ஏற்படுத்திச்சகலரும்கற்கும்படி புதிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இம்மாதிரி பரோடா ராஜ்பத்தில் சில வருஷங்களாக நடைபெற்று வருகிறது. இவையெல்லாம், இந்தியாவின்மேல் நோக்கிய கதியைக் காட்டுகின்றன.

***

புனாவில் ஒரு யூனிவர்சிடியும் பர்மாவில் மற்றொன்றும் ஸ்தாபிக்கவேண்டும் என்று ஜனங்களுடைய ஆவலானது பத்திரிகைகளில் வெளிப்பட்டு வருகின்றது. ஜனங்கள் முழுமனதுடன் தீர்மானமாய்ச் சிந்திக்கும் எக்கருமமும் சித்தியாது போகாது.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

---

## குருக்களும் சிஷ்யர்களும்.

---

உலக விகாஸத்தில் சம்பந்தமுற்றிருக்கும் அதிகாரி புருஷர்களோடு சேர்ந்து உழைப்பதற்காக, இவ்வுலகில் ஸ்தூல சரீரத்தோடு வஸிக்கும் மஹான்கள் சிலரேயாயினும், சிஷ்யர்களை அங்கீகரிக்கும் மஹான்கள் இவர்களினும் சிலரேயாவர். சிஷ்யர்களை யங்கீகரிக்கும் தன்மையாலேயே அவர்களைக் குருநாதர்களென்றழைக்கிறோம். இனி, இக்குருநாதர்க்கு நாம் சிஷ்யர்களாவதெங்ஙனம், சிஷ்யர்களாக வேண்டுவோர் என்ன யோக்யதைகளை யுடையவர்களாயிருத்தல் வேண்டும், அத்தகைய சிஷ்யன் செய்துவர வேண்டிய வேலை என்ன—இவைகளைப்பற்றி விசாரிப்போம்.

குருநாதர்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்ளப் புகுமுன் தெளிவாயறியவேண்டிய விஷயமொன்றுண்டு. அக்குருநாதர்கள் லோகஹிதத்தைச் செய்வதிலேயே முற்றிலும் கருத்துடையவர்கள். இதைத் தவிர மற்றெதையும் சற்று ஒதுக்கியே வைப்பார்கள். இதைப்பற்றி முன் எழுதியுள்ளதில், மஹான்களின் சக்தியானது, நமது பிரக்ஞைக்கு அளவிட முடியாதாயினும், அவர்களுடைய விசாலமான பிரக்ஞைக்குத்தக்கபடி அளவுக்குட்பட்டதேயாகும், என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆகையால் அவர்கள் தம் சக்தி முழுமையையும் எவ்விதத்தில் மிகப்பயன் பெறமுடியுமோ, அவ்விதத்தில் செலவிடுகிறார்கள், கொஞ்சமும் தம் சக்தியை வீணாக்கமாட்டார்கள்.

எக்கார்யத்தைச் செய்வதானாலும், அது விகாஸமுறையின் அபிவிருத்திக்கு ஸாதகமாயிருப்பது எம்மட்டு என்றும், அதே சக்தியை அதிக பிரயோஜனமாகச் செலவழிக்க வேறு உபாயம் இல்லை என்றும் நிச்சயித்த பிறகே ஒரு கார்யத்தில் இறங்கும் இயல்புடைய குருநாதர்கள், ஒரு சிஷ்யனை அங்கீகரித்து உபதேசித்து வருவதற்கும் அம்மா

திரி முன்யோசனை கொள்வது நியாயமன்றோ! வேறு விதங்களில் தம் சக்தியையும் காலத்தையும் செலவிடுவதைக் காட்டிலும், பன்மடங்கான நற்பயன் விளையுமென்று நிச்சயங் கொண்டாலொழிய, ஒருவரையும் சிஷ்யராகப் பழக்குவதற்குச் சம்மதிக்கிறார்களில்லை. இதைத்தவிர வேறெந்தக் காரணத்தாலும் மறுக்கமாட்டார்கள். ஒருவன் அநேகவிதங்களில் நற்குண முள்ளவனாயிருந்து, ஒருபெரிய துர்க்குணத்தால், எவ்வழியிலும் தடைப்பட்டவனா யிருக்கலாம், அநேக விதங்களில் நல்ல உபயோகமுள்ள வேலைக்காரனாயிருந்தாலும், அவைகளையெல்லாம் கெடுக்கக்கூடிய துர்க்குணமும் ஒன்று அவனிடமிருக்கலாம். இத்தகையானை ஒருபோதும் குருநாதர் எவரும் சிஷ்யராக அங்கீகரிக்கமாட்டார். "நீ போய் வேலைசெய்து உன்னிடமுள்ள அக்குற்றத்தைக் களைந்து, குற்றமற்றவனாய் வருவாயாகில், உன்னை என் வேலைக்கு வைத்துக்கொண்டு, மேற்கொண்டும் உன்னைப் பழக்கிவருவேன்" என்றுதான் அவர் சொல்லும்படி நேரும்.

பிறர் க்ஷேமத்தை விருத்தி செய்யத்தக்க பரோபகார சிந்தையுள்ள அநேகர், சாமான்யர்களைக் காட்டிலும் இவ்விதத்தில் தாம் விசேஷித்திருப்பதை நினைத்து, "நான் மநுஷ்யவர்க்கத்திற் குழைக்கவேண்டுமென்ற பேரவாவுடையவனாயிருக்க, குருநாதர் என்னை ஏன் சிஷ்யராகக் கொண்டு பழக்கலாகாது?" என்று வினவுகிறார்கள்.

இது விஷயத்தில் நாம் உண்மையைத் தைரியமாய் இன்னதென்று எடுத்துரைக்க வேண்டியிருக்கிறது. சிறு விஷயங்களென்று நீங்கள் வெகுவாய் அலக்ஷ்யம் செய்கிறீர்கள். அவைகளைக் குறைவறச் செய்து முடிக்கும் வழக்கம் இன்னும் உங்களுக் கேற்படவில்லை. இவ்வற்பக் குற்றங்களை மேற்கொள்ளக் கூடிய அநேக நற்குணங்கள் உன்னிட மமைந்திருக்கலாம், நல்ல

தர்ம சிந்தையுடையவனும், அன்புள்ளவனும் பிறருக்கு எவ்விதத்திலாவது உபகரிக்கவேண்டுமெனும் நோக்கமுடைவனும் நீ இருக்கலாம். ஆயினும் உலகத்தில் இம்மாதிரி நற்சிந்தையுள்ளவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் உளரன்றோ! நீங்கள் பிரஹ்மக்ஞான சங்கத்தில் சேர்ந்திருப்பதின் பயனாக, அவர்களைக் காட்டிலும் சற்று அறிவாளிகளாயிருக்கிறீர்கள். அதனால் எது அதிக பிரயோசனத்தைத் தரக்கூடியதென்றறிந்து, அதில் உங்கள் நற்சிந்தையைச் செலுத்துகிறீர்கள். சிஷ்யத்வம் அடைய வேண்டியதற்குரிய யோக்யதைகள் இவைமட்டும் போதும் என்று நினையாதேயுங்கள். அப்படியானால் ஒவ்வொரு குருநாதருக்கும் ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் ஏற்படுவார்கள். அப்போது அவர் காலமுழுமையும் தம் சிஷ்யர்களைச் சிறு குற்றங்களினின்று நீக்குமாறு, காமலோகத்திலும், ஸ்தூல லோகத்திலும் மட்டும் உழைப்பதற்குத் தான் சரியாயிருக்கும். சுத்த மனோலோகம், புத்திதத்துவலோகம், ஆத்மிகலோகம் ஆகிய இம்மேலுலகங்களில் சிஷ்யர்களின் ஆத்ம தத்துவத்தை மலரச் செய்வதற்கு சாவகாசமே போதாமல் நேரும்.

ஆகையால் குருநாதர்களை யடைந்து அவர்கள் சிஷ்யர்களாக வேண்டுவோர் முதன் முதல் செய்யவேண்டியது என்னவெனில்; குருநாதர் எவ்விதம் லோகக்ஷேமத்தின் அபிவிருத்தியைக் கருதி நடப்பதே மெய்வாழ்வென்று எண்ணுகிறார்களோ, அவ்விதமே சிஷ்யனாக வேண்டியவனும் கருதல் வேண்டும். "தனக்கென வாழான் பிறர்க்குரியாளன்" என்று கூறத்தக்கபடி, சிஷ்யனானவன் முற்றிலும் தன்னை மறக்கவேண்டும். அகந்தை மமதையை முற்றிலும் ஒழிக்கவேண்டும். இதுவெறும் பேச்சல்ல, டம்பமான வார்த்தையல்ல. உண்மையாகவே, சிஷ்யனாக வேண்டுவோன் எக்காரணத்தாலும் ஸ்வய நலத்தைக் கருதலாகாது. அவன் தன் நடத்தை முழுவதையும், தான் செய்யவேண்டிய

தற்கு அநுகூலமாகவே சீர்திருத்திக்கொள்ளச் சித்தனுயி ருக்கவேண்டும். நம்மில் எத்தனைபேர் முழுமனதோடும் சிஷ்யத்வத்தை யடைவதற்கேற்ற இம்முதற் படியில் கால் வைக்கக் கூடியவர்கள்?

சிஷ்யனுவது இலகுவான கார்யமென்று நினையாதீர்கள். யார் சிஷ்யராயிருக்கப் பிரியங்கொண்டு வலிய வந்தாலும், சிஷ்யத்வத்திற்குரிய முதற்படிக்கே அத்தகையர் தகுதியுள் ளவராயில்லையா என்பதை உடனே குருநாதர் கூறிவிடுவார். சிஷ்யனுக விரும்புவோன் கூடியமட்டிலும் எல்லா யோக்ய தைகளையும் பெற்றிருப்பினும், அவனை உடனே சிஷ்யனுக எடுத்துக்கொள்ளாமல் வருஷக்கணக்கான வெகு காலம், அவனைக் குருநாதர்கள் பரீக்ஷையில் வைத்துக் கூர்ந்து கவ னிப்பார்கள். இந்த பரீக்ஷாகாலம் சுமார் ஏழு வருஷம் வரை இருக்கும். சிஷ்யன் திருப்திகரமாய் பக்குவநிலையை யடையும் வரைக்கும், இன்னும் அதிக காலங்கூடக் காக்க வேண்டிவரும். மனோநிக்ரஹம் உள்ளவனுய்த் தன்னைத் தானே சீர்திருத்திக்கொள்ள ஆரம்பிப்பானுகில், ஏழு வரு ஷத்திற்குங் குறைவான காலத்திற்கூடப் பக்குவியாகக் கூடும். முப்பது வருஷகாலம் வரை காத்தவர்களையும் எனக்குத்தெரியும். முறையே ஐந்து வருஷங்களுக்குள்ளும், மூன்று வருஷங்கட்குள்ளும் சிஷ்யர்களாக அங்கீகரிக்கப் பட்டவர்களையும் நான் அறிவேன். ஓரே ஒருவர்மட்டும் ஐந்து மாசங்களுக்குள் சிஷ்யராக ஏற்றுக்கொள்ளப் பட் டதும் எனக்குத்தெரியும்.

C. W. லெட்பீடர்.

---

# உதயதிசை நக்ஷத்திர சங்கம்.

---

## பல்லவி.

வாரீர் பக்தர்களே நீங்களெல்லாம்
வாரீர் சங்கத்தோரே வாரீர்

## அனுபல்லவி.

எல்லோரும் கூடி நாதன் பேரைச் சொல்லி
ஏகமனதுடன் பாடிடுவோம் நாம் வாரீர்

## சரணங்கள்.

கல்வி யிருக்கும் தேரைக்கும் நாதனை
கவிகள் வாக்கில் வசிக்கும் நேசனை
காண் போருக்கெல்லாம் ஞான போதனை
கண்டு களிக்கலாம் சேர்ந்து பாடலாம் வாரீர்

பரமபத நாதன் பேரைச் சொல்லியவன்
பக்தர்களைக் காக்கும் பரம உல்லாசன்
கைலாசம் தன்னை காட்டிக் கொடுப்பவன்
கேட்போருக் கெல்லாம் ஆனந்த போதன் வாரீர்

வருவே னென்று சொன்ன சற்குருவைக்காண
சமய மிதுவே நீங்களும் வாரீர
ஒவ்வொருவர்க்கும் சற்குண சம்பத்து
வாய்க்கும் சமய மிதுவே கேளீர். வாரீர்

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ||

ஒரு மெம்பர்.

---

# பரோபகாரம்.

திராவிட தேசத்திற் கோர்திலகம் போல விளங்கிய நமது ஔவை மூதாட்டியார் தொண்டர்களின் பெரும் பாக்கியத்தைப்பற்றியும் சிறப்பைப்பற்றியும் ஓர் செய்யுளில் அதி அழகாய் விவரித்திருக்கின்றனர். அது பின் வருமாறு:—

“பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான் முகன் படைப்பு
நான்முகனோ கரியமாலுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனியங்கை யிலடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலை பாரம்
அரவோ உமையவள் சிறு விரன் மோதிரம்
உமையோ இறைவர் பாகத்தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

உலகிலுள்ள காரியங்கள் யாவற்றினும் தொண்டின் மகிமையும் அவ்விதம் தொண்டு புரியும் ஜனங்களுடைய பாக்கியமுமே பெரிதென நமது அன்னை கூறுகின்றனர். ஆனால், தொண்டு என்பது யாது? தொண்டு புரிவோர் அல்லது தொண்டர் என்போரின் தன்மையும் லக்ஷணங்களும் யாவை என நாம் விசாரித்தல் வேண்டும். ஈசனுக்கு வந்தனை, வழிபாடு முதலியன செய்தலும், பெரியோர்களிடம் பக்தி, விசுவாசம் வைத்து, அவர்கட்குப் பணி செய்தலும் மாத்திரம் மெய்யான தொண்டர்க்குப் போதாவாம். மேற்கூறிய குணங்கள் முக்கியமே ஆயினும், அக்குணங்களோடு எவ்வுயிரிடத்தும் விழிப்பான அன்பும்; சற்றும் கைம்மாறு எதிர்பாராது தமது பூரணசக்தியையுபயோகித்து பிறர்க்குபகாரஞ் செய்ய ஆவலும் எவரிடம் வாய்த்திருக்குமோ அவரே மெய்யான தொண்டரென நான்

கொள்கின்றேன். ஏனெனில், கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்குபதேசஞ் செய்யுங்கால் "எவன் தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் மதிக்கின்றானோ அவனே பக்தன் தத்துவஞானி" என்கின்றார். அத்துடன், அவன் எவ்வுயிரிலும் ஈசனையே பார்த்தல் வேண்டும். ஈசனே அவ்வுயிரெனவும் மெய்யா வுணரவேண்டும். அவ்விதம் சர்வ ஜீவன்களின் ஏகீ பாவத்தை யுணர்பவர்களே கருணையங்கடலாகிய ஈசனுக்கு ஆப்தர்கள்.

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ।
𑌈𑌕𑍍𑌷𑌤𑍇 𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ॥
𑌯𑍋𑌮𑌾𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌮𑌯𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸 𑌚 𑌮𑍇𑌨𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ॥
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌯𑍋𑌮𑌾𑌂 𑌭𑌜𑌤𑍍𑌯𑍇𑌕𑌤𑍍𑌵𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸𑌯𑍋𑌗𑍀𑌮𑌯𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

அத்தகைய உயர்ந்த ஞானம் நம்போலியர்க்கு எளிதில் வரக்கூடியதல்ல. ஆயினும், பரோபகாரம் புரிதல் என்ற காரியத்தாலேயே அவ்விஷயத்தை நாம் சற்றுவது அறிந்திருக்கின்றோமென நன்கு விளங்குகின்றதன்றோ? அன்பிலாவிடத்துப் பரோபகாரம் அல்லது பரகைங்கரியம் எங்ஙனம் சாத்தியம்.? ஆனது பற்றியே, நாம் அவ்வன்பை விருத்தி செய்ய முயலவேண்டும்.

பரோபகாரத்தால் உலகம் நிலைபெற்று நிற்கின்றது, நமது முன்னோர்கள் இப்பெரும் காரியத்தை லோக தாரணத்தை யக்ஞதர்மம் அல்லது யக்ஞம் (The Law of Sacrifice) எனவும் சொல்லிவந்தார்கள். நம்மைப்போன்ற சாதாரண ஜனங்கள் மாத்திர மல்லாது வீடு அல்லது மோக்ஷானந்தத்தைப் பெற்ற மஹான்களுங்கூட லோகோபகாரம் அல்லது லோக கைங்கரியம் என்ற பெருந் தொழிலை இடைவிடாது நடாத்தி வருகின்றார்கள். அவர்களுதவியிராவிடின் உலகு எல்லையற்ற துன்பமுறும். அது தரித்திராது, மோக்ஷம் அல்லது வீடு பெற்றவர்கள் எல்லோரும்

உலகத்திற்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லையென நினைத்து இங்கு திரும்பாமலே யாங்கோ செல்கின்றார்கள் என்ற தவறான அபிப்பிராயம் அநேக விடங்களில் வழங்கி வருகின்றது. அப்பெரியோர்கள் பிறப்பு இறப்பு நீங்கியவர்கள் என்பது உண்மையே. இவ்வுலகத்திற்குத் திரும்பிவர அவர்களைப் பலவந்தப்படுத்த ஒருவராலு மாகாது. ஆயினும் அவர்களே தங்கள் கருணையால் திரும்பவும் அதிகார புருஷர்களாய் இவ்வுலகத்திற்கு வந்து நம்மையும் மீட்கவென்றே கல்பங்கள்தோறும் பிரயாசைப்படுகின்றார்கள்.

இதற்கு தாரணமாக ஸ்ரீவசிஷ்ட பகவான் யோகவாசிஷ்டத்தின் ஆரம்பத்தில் ராமசந்திர மூர்த்திக்குத் தெரிவிக்கின்றார்:—

"பிரஹ்மாவின் ஆக்ஞையின்படியே நான் பாரதகண்டத்திற்கு வந்து இங்கு மானிடவர்க்கம் தங்கும்வரை நானும் வசிப்பேன். இவ்வுலகிலுள்ள பொருள்களில் எனக்கு விருப்பமே யில்லை. (நான் சகலத்தையு மடைந்து அநுபவித்தவன்) உலகின் வியாபாரங்களில் பிரவிர்த்தித்த போதிலும் சுஷுப்தி யவஸ்தையிலிருந்துகொண்டு, துக்கத்தைக் கொடுக்கும் மனதின் விர்த்திகளுக் கப்பால் நான் சென்றுவிடுவேன். என் செயல்களில் "நான்" என்பது சற்றேனும் வராது. ஆத்மக்ஞான மடையும்படியாய் (மோக்ஷம் பெற) சாதன சதுஷ்டயங்கள் எவரிடமுளவோ அவர்கட்கு நான் தீக்ஷையளிக்கின்றேன்."

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளும் பின்வருமாறு கூறுகின்றனர்:—

𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌿𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌵𑌸𑌨𑍍𑌤𑌵
𑌲𑍍𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌃 𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑍀𑌮𑌭𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌜
𑌨𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌤𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌃 ॥

"ஜனன மரணமெனும் பயங்கரமான சமுத்திரத்தை நீந்திக்கடந்து சாந்தத்தை யடைந்த மஹா புருஷர்கள் யாதொரு அபிமானமுமின்றி பரோபகாரமாய் ஆன்மாக்களை முத்திநெறியிற் கூட்டி வைக்குப்படியான உலக நன்மையின்பொருட்டே உயிர் வாழ்ந்துகொண்டு பூமியில் சஞ்சரிக்கின்றார்கள்"

பாகவதம் 1-வது ஸ்கந்தம் 4-வது அத்தியாயம் 12-வது சுலோகத்தில், உண்மையான பக்தர்கள் உயிர் வாழ்ந்துகொண்டிருப்பது உலகத்தின் நன்மையின் பொருட்டே, அஃது சுயநயம் கருதியன்று எனப்பொருள்பட, பின்வரும் சுலோகம் கூறப்பட்டிருக்கின்றது:—

𑌶𑌿𑌵𑌾𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌭𑌵𑌾𑌯 𑌭𑍂𑌤𑌯𑍇 ।
𑌯 𑌉𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌜𑌨𑌾𑌃
𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑌸𑍌𑌪𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌂
𑌮𑍁𑌮𑍋𑌚𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌕𑍁𑌤𑌃 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।

இவ்விதமே, மறுபடியும், பாகவதத்தில் பிரஹ்லாதாழ்வார், "ஓ ஈசா, முனிவர்கள் அநேகமாய்த் தாங்கள் பொருமாத்திரம் மோக்ஷத்தை யிச்சித்தவர்களாய், ஜனங்களில்லாத வனங்களில் வசித்துக்கொண்டு, மற்றவர்களின் க்ஷேமத்தை கைக்கொள்கிறார்களில்லை. அக்ஞானத்தில் ஆழ்ந்து வருந்தும் சம்சாரிகளாகிய என் சகோதரர்களை நீக்கிநானொருவன் மாத்திரம் மோக்ஷத்தையடைய விரும்புகின்றேனல்லன்" என்று ஹரியைப் பார்த்துச் சொல்கின்றார்.

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣𑌦𑍇𑌵𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑍍𑌵𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌮𑌾𑌃
𑌮𑍌𑌨𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑌨𑍇 𑌨 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 ।
𑌨𑍈𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑍃𑌪𑌣𑌾𑌨𑍍
𑌵𑌿𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷 𑌏𑌕𑍋 𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌦𑌸𑍍𑌯 𑌶𑌰𑌣𑌂 𑌭𑍍𑌰𑌮
𑌤𑍋𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑍇 ।

மறுபடியும் ஸ்ரீமத் பாகவதத்தில் 2-வது ஸ்கந்தம் 2-வது அத்தியாயம் 26-வது சுலோகம் சொல்வது யாதெனில்,

"தங்களது சுற்கர்ம பலத்தினல் மஹரிஷிகள் சத்திய லோகத்தை யடைந்தனர். அவ்விடத்தில் கிழத்தனம் துன்பம், கலக்கம் இவைகளை யவர்கள் காணவில்லை. அங்கு நித்தியானந்தத்தைத் தவிர வேறில்லை. ஆயினும் துன்பத்தில் மூழ்கி வருந்தும் அக்ஞானிகளாகிய தங்கள் சகோதரர்களுக்காக துக்கமும் இரக்கமும் அவர்கள் கொண்டார்கள். இந்த ஞானஹீனமான சகோதரர்களும் முத்தியடைந்து நித்தியானந்தத்தை யநுபவிக்குமாறு, தாங்கள் அச்சத்திய லோகத்தின் கண் அநுபவித்துவரும் ஆனந்தத்தைத் துறந்து, அவர்களையும் தாங்கள் எட்டிய நிலை மட்டத்திற்குத் தூக்கி விடுவதற்கான வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள்."

இப்பெரியோர்களின் அன்பு எல்லையற்றது. தங்களுக்குக் கிடைத்த சுகம் யாவும் மற்றவர்களோடு பகுந்துகொள்வதற்காகவே யிருக்கின்றனவென அவர்கள் கொள்கின்றார்கள். அத்துடன் அவர்கள் எதையும் வேறுயிர் எனக்கொள்வது மில்லை. அவர்கள் சர்வஜீவன்களின் ஒருமைப்பாட்டை மெய்யாகவே உணர்ந்தவர்கள். அதுவே நமக்கும் அவர்கட்குமுள்ள வித்தியாசம். ஆனல், அவர்கள் நிர்வாண பதத்தை யடையுந் தருணத்திலே தான் இவ்விதவுணர்ச்சி பெற்று அப்பேரானந்தத்தைத் துறந்து, உலகிற்குழைக்க எகினர்களென நாம் நினைக்கப்படாது.

அவர்கள் ஜீவன் முக்தர்களாவதற்கு முன்னரே எடுத்த ஜன்மங்களொவ்வொன்றிலும் இராப் பகலாய் மற்றவர்கட் குழைத்து, தனதென்று எதையும் கருதாது, உலகின் தொண்டிற்குயாவற்றையும் சமர்ப்பித்திருந்தனர். அவ்

விதம் மனம், மெய், மொழி இம்மூன்றையும் பரோபகாரத்தின் பொருட்டு தத்தஞ் செய்து எண்ணிறந்த பிறப்புக்களில் உழைத்து வந்த காரணத்தாலேயே, கடைசியாய் மோக்ஷானுபவத்தையுங் கூட அதி சுலபமாய்த் துறந்தார்கள். இதுவே அவர்கள் மெய் வாழ்க்கையின் ரகசியம்.

கைவல்லிய நவநீதம் என்னும் நூலிலும் மேற்கூறிய அபிப்பிராயங்கள் காணலாம்.

"நல்லவனே கேள் உலகுபகாரம் ஞானிகள் விவகாரம், அல்லது வேறொரு பெறுபேறும் இலையதனாற் பிணியும் இலை" என அக்கிரந்தத்திற் கூறப்பட்டுள்ளது.

மேனாட்டில் சற்றேறக் குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் அவதரித்த இயேசுகிறிஸ்து என்னும் ஞானாசிரியரும் தம் சிஷ்யர்களைப் பார்த்து ஓர் சமயம் சொல்கின்றார்:—"உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக் காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷ குமாரரும் ஊழியம் பெறும்படி வரவில்லை. ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும்பொருட்டு தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்."

மேற்கூறிய வண்ணம் சொல்வதோடு மாத்திரமல்லாமல் அவர் தனது வஸ்திரங்களைக் கழற்றி, ஒரு சீலையையெடுத்து அரையிலே உடுத்திக்கொண்டு, பின்பு ஓர் பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, தம் பன்னிரு சிஷ்யர்களுடைய கால்களைக்கழுவவும், தாம்கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். பிறகு, அவர் "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை யொருவர்

கழுவக் கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். நீங்கள் இவைகளை யறிந்திருக்கிறபடியால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்றார். (மத்தேயு 20-ம் அத்தி. 26—28. யோவான் 3-ம் அத்தி. 4, 5, 12, 14, 15, 17.)

அம்மஹானுக்குள்ள வணக்கத்தையும் அடக்கத்தையும் நாம் பார்க்குமளவில், பகை, அன்பின்மை, கர்வ முதலிய நமது குறையான பழக்கங்களையும் குணங்களையும் அவர் நடத்தை பழிக்கின்றதல்லவா? அப்பெரியோரே அவ்விதங் கைங்கரியம் புரிந்தாரானால், நம்மைப் போன்ற ஜனங்கள் ஏன் அவர் வழியைப் பின்பற்றக் கூடாது? நாவால் மாத்திரம் ஈசனைப் பஜித்து, மனதிலும் காரியத்திலும் ஈசனை வழிபடாதிருத்தல் நலம் பயக்குமா?

மேனாட்டு மதாசாரியர்களைப் பற்றி நமக்கு அதிகமாய் ஒன்றும் தெரியாதிருக்கலாம்.

ஆயினும் நமது நாயன்மார்கள் சரித்திரத்தையாவது நேயர்கள் நன்கு அறிவார்கள். சிறுத்தொண்டர், இளையாங்குடிமாற நாயனார் முதலியோர் சரித்திர மனைத்தையும் நாம் சோதித்தால், தொண்டு, ஸேவை, பாகைங்கரியம் அல்லது பரோபகாரம் என்னும் பெரும் விஷயத்தை யவர்கள் அநுபவத்தி லுணர்ந்தவர்களெனத் தெரியவரும். ஆனால், அவ்வித கைங்கரியமோ, ஈசனிடம் பக்தி வைத்து, ஈசன் லோகத்தைவிடத் தனித்து நிற்கின்றார் என்ற எண்ணம் பற்றியே நிகழ்ந்ததெனத் தோன்றுகிறது. ஆனால் இக்காலத்தில் வேண்டிய பக்தியோவெனின், அவ்வீசனை ஒவ்வோருயிர் கண்ணும் தரிசித்து, அதன் பரிபாக நிலைமையை யறிந்து அவ்வுயிர் மேற் செல்லக்கூடிய உதவியைப் புரிதலேயாம்.

உலகத்தில் விகாசமுறையை நடாத்திவரும் மஹரிஷிகள் அவ்விதமே செய்து வருகின்றார்கள். இப்புவியென்ற

பள்ளியின் கண் அநேக விஷயங்கள் நாம் கற்க வேண்டியி ருக்கின்றன. அவைகளில் ஒன்று அன்பு என்பது. (அன்பு, என்ற விருக்ஷத்தின் கனியே பரோபகாரமென்பது) அன்பு, பரோபகாரம் என்னும் பாடத்தை நாம் இன்னும் கற்றோமில்லை. நாம் உலகெனும் இப்பள்ளியில் அரிச்சுவடி படிக்கும் பாலர்கள். மோக்ஷானந்தத்தைப் பெற்றும், அதைத்துறந்து, லோகோபகாரார்த்தமா யுழைக்கும் மஹரிஷிகளோ இப்பள்ளியிலுள்ள கலாசாலை சமஸ்த பரீக்ஷைகளிலுந் தேறி நமக்குபதேசம் செய்துவரும் ஞானாசாரியர்களாகவும், பள்ளியை நடாத்தும் புண்ணிய புருஷர்களாகவு மிருக்கின்றனர். எனவே, பரகைங்கரியம் என்பது பெரும் வித்தை. ஓர் அற்புத மான சாஸ்திரம். தன் சுகத்தையும், கஷ்டத்தையும் மானத்தையும் பற்றியே சிந்தனை கொண்டிருப்பவர்கள் அதைச் செவ்வனே கற்க முடியாது. அதில் சுலபமாய்க் கற்கக் கூடிய விஷயங்களும் உள. துணிபான மனோவிர்த்தி, தூய்மையாம் வாழ்வு இவையுள்ளவர்களுங்கூட சிந்தித்து நிற்கும்படியான பல சிக்கல்களும் சந்துபொந்துகளும் அதன் கண் உள.

பெரும்பான்மையான ஜனங்கள் நற்காரியம் புரிய அவகாசமும் தருணமும் தங்களுக்கு வாய்ப்பதில்லையெனக் கூறுகின்றார்கள். அவகாசமும் தருணமும் கிடைக்கவில்லையென்று சொல்வது அவர்கள் மனக்குறையைக்காண்பிக்கின்றதே தவிர சௌகரியக் குறையைக் காண்பிப்பதில்லை. உதவிபுரிய வேண்டுமென நாம் மெய்யாய்க் கருத்துக்கொள்வோமாகில், கைங்கரியம் புரிய சமயங்களுக்குக் குறைவு சற்றேனும் ஏற்படாது. "மனமுண்டானால் வழியுமுண்டு" என்ற வசனம் இவ்விஷயத்தில் மிகப் பொருத்தமுள்ளது.

(இன்னும் வரும்.)

ஆர். பஞ்சாபகேசையர்.

---

## மீராபாய்.

(426-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 2. களம் 4.

இடம்—மீராபாயினந்தப்புரம். நாடகப்பாத்திரர்—மீராபாய்.

---

மீரா—(பக்கத்திலொரு கூட்டிலிருக்குமொரு கிளியை நோக்கி) ஹரே கிருஷ்ணா! சொல்லு, ஹரே கிருஷ்ணா! உனக்குக்கூட என்னிடத்தில் வெறுப்பா? என்பதி என்னை வெறுப்பது போதாதா?—என்பர்த்தா இப்படியிருப்பது ஆச்சரியப் படத்தக்கதாயிருக்கிறது. நான் இவரை மணந்து முதன்முதலிங்கு வந்தபோதவருக் கென்னிடத்திலிருந்த அன்பு மாதரவு மிப்போதெங்கே போயினவோ தெரியவில்லை. எப்போது மென்னோடுதான் வார்த்தையாடிக் கொண்டிருப்பார், அடிக்கடி யென் வார்த்தைகளைக் கேட்டானந்திப்பார், எனக்கொரு குறைவும் வராமல் கவனித்துக்கொண்டிருப்பார். அப்படி யிருந்தவ ரிவ்விரண்டு மூன்று மாதங்களாக என்னிடத்திலொருவாறாக விருக்கிறாரே. என்னிடம் பேசுவதுகூட துர்லபமாய்விட்டதே. இதற்குக் காரணமென்ன விருக்கக்கூடும்? நான் நகரத்துக்கு வெளியிற்சென்று கிருஷ்ணாலயத்தில் பஜனை செய்வதவருக்குப் பிடிக்கவில்லையோ? கிருஷ்ண பக்தி செய்வது தவறென்று யாராவது சொல்லுவார்களா? வேறு ஏதாவது காரணமிருக்கவேண்டும். இந்த அற்ப சங்கதியை யொரு பொருட்டாயெண்ணி என்னை வெறுக்கக் கூடிய ஸ்வபாவ மென்பதிக்குக் கிடையாதே. மனது தங்கமான மனதாயிற்றே. யாராவதிவருக்குத் துர்ப்போதனை கொடுக்கிறார்களோ? அப்படியுமிருக்க இடமில்லையே. எனக்கு யாராவது விரோதி யிருந்தாலல்லவோ இப்படிச் செய்வார்கள். நானொருவருக்கும் தீங்கு செய்தவளல்லவே. அப்படியிரு

க்க எனக்கெப்படிவிரோதி இருக்கக்கூடும்? நாளுெருவரைப் பற்றிச் சொல்லப் போவானேன். நான் ஜன்மாந்தரங்களிலென்ன பாபம் செய்தேனே? என்ன துஷ்கிருத்யம் செய்தேனே? நான் செய்த கர்ம மென்னைவிட்டு விலகுமா? அது தானென்னை யிப்படி வருத்துகிறது போலும். அதைக் குறித்து நான் கவலைப்படுவானேன்? ஈசனுடைய பாதார விந்தத்திலெனக்குப் பரிபூரண பக்தி யிருக்குமாயி னிவைகளுக்கெல்லா மஞ்சுவானேன? ஐயோ, இதென்ன? எனது வலதுபுஜம் துடிக்கிறதே. எனக்கேற்கனவே இருக்கும் துன்பம் போதாதா? இன்னு மெனக்கென்ன கேடு வரப் போகிறது? ஹரே, கிருஷ்ணு!

(நீலா அழுதுகொண்டு வருகிறுள்.)

நீலா என்னடி இது? ஏனடி அழுகின்றுய்?

நீலா—ஐயோ, அம்மா (தேம்பித்தேம்பி யழுகிறுள்)

மீரா—என்னடி சமாசாரம்? ஏனிப்படி வருந்துகிறுய்?

நீலா—அம்மா, நானெப்படி யுரைப்பேன்? ஐயோ, இந்த சமாசாரத்தை யுங்களிடம் சொல்ல என்னைத்தவிர வேறேயொருவரும் மஹாராஜாவுக் ககப்படவில்லையா? இந்த சமாசாரத்தைச் சொல்ல என் நாவெழவில்லையே.

மீரா—என்னடி நீலா? சமாசாரத்தைச் சொல்லாமற் புலம்புகிறுயே.

நீலா—கூடிய சீக்கிரத்திலிந் நகரம் முழுவதும் பாழாகப்போகிறதே. சூரியனைக் காணுத தாமரைபோலும், சந்திரனைக் காணுத குமுதபுஷ்பம் போலும், பர்த்தாவைக் காணுத பதிவ்ரதை போலுமிந்தப்பட்டணம் துடிக்கப்போகிறதே அம்மா, உங்களை விட்டுப் பிரிந்து நாங்களெப்படி யிருப்போம்?

மீரா—என்னைவிட்டு நீங்களேனடி பிரியவேண்டும்? என்னடி சமாசாரம்? அழுவதை நிறுத்து.

(நீலாவின் கண்ணைத் துடைக்கிறாள்.) சமாசாரத்தைச் சொல்லு.

நீலா—நீங்களிந்த அரண்மனையைவிட்டு வெளியேபோகும்படி மஹாராஜா உத்தரவளித்திருக்கிறாரம்மா. (கதறுகிறாள்.)

மீரா—(பிரமித்து) கிருஷ்ணா, இதுவுமுன் லீலையா? நீலா இவ்வளவுதானே. இதற்காக நீ யிவ்வளவு வருந்துவானேன்? இவ்வரண்மனையிலிருந்து மஹாராஜா வென்னைக் காணும்போதெல்லா மவருக்கு மனவருத்தத்தை யுண்டாக்கிக்கொண் டிருப்பதைவிட அவர் கண்ணிற் படாமலிருப்பது நலமல்லவா? இப்போது நான் கஷ்டப்படவேண்டிய வேளை. நீயழாதேயம்மா. நீயழுதாலெனக்கும் துக்கமதிகரிக்கும்.

நீலா—நானெப்படி யழாதிருப்பதம்மா? நான் மட்டுமா அழுகிறேன்? இந்நகரம் முழுவதுமே கதறுகிறதே. உங்களை விட்டுப்பிரிந்த நகரம் நகரமா? பாழுங்காடல்லவா?

மீரா—நீங்களிப்படி யழுவானேன்? நானில்லாமற்போனால் சுந்தரீபாய் முதலானவர்களில்லையா? இந்த விஷயமுங்களுக்குக்கூட அவ்வளவு வருத்தத்தைக் கொடுக்காது. உங்களுக்கெப்படியாவது பொழுது போய்விடும். எனக்கல்லவோ சகிக்கமுடியாத துக்கத்தைக் கொடுக்கும். பிறந்ததுமுதல் சகிகளோடு சேர்ந்திருந்து, இங்கு வந்தபிறகு உங்களுடைய் சகவாசத்தை யடைந்து கொஞ்சங்கூடக் கவலையில்லாமற் காலத்தைக் கழித்துவந்த எனக்கு மனம் பொறுப்பது வெகுகஷ்டம். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் வருத்தப்படுவதைப் பார்த்தாலென் மனம்

தாங்காது. வெகு கஷ்டப்பட்டு என்மனதை யடக்கிக் கொண்டிருக்கிறேன். நீ யிப்படியழுதா லென்மனது மிளகிவிடும்.

நீலா—(கண்ணைத் துடைத்துக்கொண்டு) நீங்களிப்போதெங்கே செல்லப்போகிறீர்கள்? திரும்பவு முங்களை நாங்களெப்படிக் காண்பது?

மீரா—மஹாராஜா என்னை யிவ்வரண்மனையைவிட்டுத்தானே வெளியே போகச்சொன்னார். இவ்விராஜ்யத்தைவிட்டு வெளியேபோகச் சொல்லவில்லையே. நானூருக்குவெளியிலந்தக் கிருஷ்ணாலயத்தைக்கட்டினபோதுதன் பக்கத்திலுள்ள காட்டிலொரு குடிசையை யிந்நகரம்வழியாய்ச்செல்லும் பரதேசிகள் தங்கும்படிக்குக் கட்டிவைத்திருக்கிறேன். நான் கட்டின தெனக்கேயிப்போது உபயோகப்படுகிறது. அங்கே யிருந்தாலெனக்கும் சௌகரியமுண்டு. கிருஷ்ணாலயம் பக்கத்தில்தானிருக்கிறது. நான் வேண்டும்போதெல்லா மங்கேபோய் பஜனை செய்யலாம்; ஒருவேளை கொஞ்சநாள்கள்கழிந்தபின் என்பதிக்கென்மீது கிருபை வரக்கூடாதா?—நீலா, அவரேனடி யிப்படியெனக்குத்தாவளித்திருக்கிறார்? உனக்குத் தெரியுமா?

நீலா—தெரியும். ஆனாலம்மா, என்னாலதைச்சொல்ல முடியாது.

மீரா—என்ன காரண மிருந்தாலும் பாதகமில்லை. சொல்லு.

நீலா—(சற்று யோசித்து) அம்மா, நான் மாட்டேனம்மா.

மீரா—(யோசித்து) என்னடியிது, என்னுடைய நடத்தையைப்பற்றி யேதாவது—

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் M. A.

# கைங்கரியப் பேச்சு மாத்திரம் போதாது.

உலகத்திலுள்ள மனிதகோடிகளின் மனோபாவங்களை உற்று நோக்குமிடத்து அவர்கள் ஒருவரையாவது முற்றிலுங் கெட்டவர்களென்று சொல்ல நியாயமில்லை. ஏனெனில் ஒவ்வொருவரிடமும் ஏதாவதொரு நற்குணமிருந்து கொண்டேயிருக்கிறது. ஆனால், சிலரைக் கெட்டவர்களென்றும் சிலரை நல்லவர்களென்றும் பகுப்பதற்குக் காரணமென்னவெனில், கெட்டவர்களென்று சொல்லப்படுபவர்களிடம் நற்குணங்கள் ஸ்வல்பமாகவும் நல்லவர்களென்று சொல்லப்படுபவர்களிடம் மிகுதியாகவும் காணப்படுவதேயாம்.

ஔவைப்பிராட்டியார் "சாதி யிரண்டொழிய வேறில்லை" எனக்கூறியபடி மனிதர்களிரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள். அஃதாவது தெரிந்தவர்கள் தெரியாதவர்கள். ஈசுவர நியதிக்கிரமத்தையறிந்து அவ்வொழுங்கின்படி நடப்பவர்கள் தெரிந்தவர்கள். அதைத் தெரிந்து கொள்ளாமல் தமக்குச் சுகத்தைத் தரத்தக்கதென்று அவர்களுக்குத் தோன்றுவதான பல வழிகளில் தங்கள் மனம் போனபடி நடப்பவர்களே தெரியாதவர்கள்.

ஆனால் தெரிந்தவர்களென்று சொல்லப்படுபவர்களில் பெரும்பாலாராகிய நாம் கைங்கர்யம் செய்வதைப் பற்றிப் பேசுகிறோமேயன்றி நாம் தெரிந்து கொண்ட விஷயங்களை அநுபவத்துக்குக் கொண்டு வராமலிருக்கின்றோம். அப்படிப் பட்டவர்களாகிய நம்முடைய நடத்தையானது பசியுள்ள வொருவன் தன் இலையிலிருக்கும் ஆகாரத்தைப்பார்த்து அது நன்றாகவிருக்கிறதென்று சொல்லிவிட்டு அதை எடுத்துப் புசிக்கப் பிரயத்தனப் படாமலிருப்பதை யொக்கும் என, ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியவர்கள் கூறியுள்ளார்.

விஷயங்களை நாம் அறிந்துகொண்டிருந்தாலும் அதை அநுபவத்திற்குக் கொண்டுவராமலிருப்போமானால் நாமும் தெரியாதவர்களே யன்றி தெரிந்தவர்களாகோம். அநுபவத்திற்குக் கொண்டுவராமல் விடுவதற் கென்னகாரண மென்று யோசிப்போமானால் நமக்கு அதிலுண்டான நம்பிக்கையானது ஹிருதய பூர்வமானதல்ல வென்று ஏற்படுகிறது.

ஹிருதய பூர்வமாக ஒருவன் ஒரு விஷயத்தையறிந்து கொள்வானானால் அப்போது அதைத் தன் அநுபவத்திற்குக் கொண்டு வராமல் விடவே மாட்டான். வேதாந்த விஷயங்களையும், நீதி மார்க்கங்களையும் பற்றிய உபந்நியாசங்களைக் கேட்கும் போதும் புத்தகங்களைப் படிக்கும் போதும் அவ்விஷயங்களெல்லாம நாம் முந்தியே தெரிந்து கொண்டிருப்பவைகளாக நமக்குத் தோன்றுகின்றனவே யன்றி ஒன்றும் புதிதாகக் காணப்படுவதில்லை. அப்படியிருந்தும் அவ்விஷயங்கள் நம் அநுபவத்தில் கொண்டு வரப்படாமலிருப்பதால் கேட்டு அல்லது வாசித்து முடிந்த தக்ஷணமே நம்மனதை விட்டகன்றுவிடுகின்றன.

சிலர் இவ்விஷயங்களைப் பிறர் மனதில் படியும்படி பிரசங்கிக்கவும் சக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவைகளைத் தம் அநுபவத்திற்குக் கொண்டுவருகிறதில்லை. பிறர் மனதில் பதியும்படி பிரசங்கிக்கும் சக்தியாகிய பாக்கியத்தைப் பெற்றிருப்பவர்கள் அவ்விஷயங்களைத் தம் மநுபவத்திற்குக் கொண்டு வந்திருப்பார் களாயின் அவர்கள் பிரசங்கத்தால் விளையும் பயன் ஆயிரம் மடங்கு இன்னும் அதிகமானதாக விருக்கும். கட்குடியனென்றும், காமியென்றும் பலராலறியப்பட்ட உபாத்தியாயனொருவன் தன் மாணாக்கர்களுக்கு நீதிமார்க்கத்தைப் புகட்ட ஆரம்பித்தால், அது அவர்கள் மனதில் எவ்வாறு பதியும்! வாய் திறந்துபேசும்சக்தி நமக்கில்லாவிட்டாலும் நம்நடத்தையா

னது பரிசுத்தமானதாக ஏற்பட்டு விடுமானால் நம்முடைய ஒழுக்கத்தாலேயே அநேகரை நல்வழிப்படுத்திவிடலாம். "சற்குருசரணநிழலில்" என்னும்புஸ்தகத்தைநாம்எவ்வளவு பேரோபடித்திருக்கிறோம். அதை வாசித்தவர்களாகிய நாம் ஆஹா! ஆஹா!! எவ்வளவு நன்றாகவிருக்கிறது! என்றுசொல்லுகிறோமேயொழிய அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களிலொன்றையாவது அநுபவத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோமா? அதை வாசிக்கும் போது அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் மேலானதாகவும் அதிக சுலபமாக அநுபவத்திற்குக் கொண்டுவரக்கூடியவைகளாகவும் தோன்றுகின்றனவேயன்றிக் கஷ்டமான விஷயங்களாகக் காணப்படவில்லையே. அவ்விஷயங்களை யநுபவத்திற்குக் கொண்டு வந்து விடுவோமானால் ஸ்ரீமாந் கிருஷ்ணமூர்த்தியவர்கள் பெற்றிருக்கும் பாக்கியமாகிய உபதேசத்தை நாமும் பெற்றுவிடலாமன்றோ? அவைகளை நம் அநுபவத்திற்குக் கொண்டு வராமலிருப்பதற்குக் காரணம் நம் ஊக்கக்குறைவல்லவா? நம் ஆயுட்காலம் முழுவதையும் பிரசங்கங்களைக் கேட்பதிலும், புஸ்தகங்களைப் படிப்பதிலும் செலவிட்டாலும், அவ்விஷயங்களை அநுபவத்திற்குக்கொண்டுவராவிட்டால் அதனால் வரும் பயன் யாது? மிக்க சிரேஷ்டமான நம்முடைய வேத, சாஸ்திர, புராணாதிகளை வாசித்தறியச் சக்தியற்றிருந்தவர்களாகிய நமக்கு சென்ற சுமார் 25வருடகாலமாக நம் சாஸ்திரங்களிலுள்ள விஷயங்களை யெடுத்துக் கரைத்துப் புகட்டி வரும் மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையாரவர்களுக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம். நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய கைம்மாறு யாது ? அவர்களின் உபந்யாசங்களைக் கேட்டவர்களாகிய நம்மிற் சிலராவது அவ்வொழுங்குகளின் படி நடந்தோமானால் அதுவே அவ்வம்மையார் நமக்காகப் படும் சிரமத்திற்குப் பெரிய கைம்மாறாகும்.

முன் சொன்னபடி ஹிருதய பூர்வமான நம்பிக்கை யேற்படுவதெப்படி யெனில் அநுபவத்திற்குக் கொண்டு வருவதால் மட்டுந்தான். அக்கினியைக் கையிலெடுக்க யாராவது துணிவார்களா? ஏன் துணிகிறதில்லை? அதைத் தொட்டதினுல் முன் பலமுறை கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிருர்கள். அவர்களுக்கு அது சுட்டுவிடும் என்னும் நம்பிக்கை ஹிருதய பூர்வமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அது ஒருபோதும் மாறக்கூடியதன்று. அக்கினியைத் தொட்டு அதனுல் துன்பமடைந்த பின் தானே அது சுட்டுவிடுமென்னும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி மற்ற விஷயங்களிலும் அநுபவமுண்டான பின்தானே ஹிருதய பூர்வமான நம்பிக்கையுண்டாகும் என சிலர் சங்கிக்கலாம். அஃதுண்மையே. சில விஷயங்களில் நமக்கேற்படும் நம்பிக்கை அநுபவ. சித்தமானதாகவும் வேறு சில விஷயங்களில் நமக்கேற்படும் நம்பிக்கை சுருதி, யுக்திகளை யநுசரித்ததாகவும் தானிருக்கக்கூடும். உலகத்தில் தாம் பிறந்தது முதல் தேள் கடி, பாம்புகடி முதலிய கஷ்டங்களுக்குள்ளாகாத ஜனங்கள் பலரிருக்கின்றனர். அவர்கள் பாம்பையும், தேளையும் கண்டால் ஏன்பயப்படுகிருர்கள்? அதனுலுண்டாகும் தீமைகளைப் பிறர் மூலமாக அறிந்து அதில் ஹிருதய பூர்வமான நம்பிக்கை யேற்பட்டிருப்பதனுலல்லவா அப்படிப்பட்ட விஷ ஜந்துக்களைக் கண்டால் பயமடைகிருர்கள்?

அதே மாதிரி நமக்கு மிவ்விஷயங்களில் ஹிருதய பூர்வமான நம்பிக்கை யேற்படவேண்டும். அவ்விதமான நம்பிக்கை ஏற்பட்டால் தான் நம்முடைய ஒழுக்கங்கள் எல்லாம் நல்ல வழியில் மாறும். அப்படியன்றி சத்விஷயங்களையெல்லாம் ஒரு காதால் வாங்கி மற்ருெரு செவியால் விட்டுவிடுவோமாளுல் ஓட்டைச் சட்டிக்கும் நமக்

கும் யாதொரு வித்யாசமுமில்லை. நாம் பேசும் ஒழுங்குகளும், வேதாந்த விஷயங்களும் வீண் பேச்சாய் முடியுமே யன்றி வேறு ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது.

நம்மில் அநேகர் கடவுளிடத்திலும் குருநாதர்களிடத்திலும் பக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் சிலரைத்தான் உண்மையான பக்தியுள்ளவர்களென்று சொல்லலாம். பாக்கியுள்ளவர்கள் பக்தி யெல்லாம் டம்பத்துக்காகவும், பிறர் மெச்சுவதற்காகவும் செய்யப்படும் பக்தியே. அப்படிப்பட்டவர்கள் ஹிருதயத்தில் பக்தியென்பது சிறிது மிராது. அவர்கள் தம்மிடத்தில் பக்தியுள்ளவர்களேயன்றி கடவுளிடமாவது, குருநாதர்களிடமாவது பக்தியுள்ளவர்களல்லர். தாங்கள் செய்யுங் காரியங்களை யெல்லாம் சதா குருநாதன் ஞாபகத்துடனும் குருநாதனை நேரில் நின்று பார்த்துக் கொண்டிருந்தால் எவ்வளவு ஒழுங்காகவும், சிரத்தையோடும் செய்வார்களோ அதே மாதிரி செய்து அதனால் ஏற்படும் பயனை குருநாதனுக்கு அர்ப்பணம் செய்கிறவர்களே உண்மையான பக்தர்கள், "மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்" என்று நாயனார் கூறியுள்ளபடி அப்படிப்பட்ட பக்தர்களின் ஹிருதயத்தில்குருநாதன் எப்போதும் வசிக்கிறார். அப்படிப்பட்ட தீவிர பக்தியில்லாதவர்களாகிய நாம் பிரசங்கங்களைக் கேட்கும் போதும், புஸ்தகங்களைப் படிக்கும்போதும் மட்டும் குருநாதர்களிருப்பதாக நினைக்கிறோம். அதுவும் அவர்கள் சமீபத்தில் இருப்பதாக நினைக்கிறதில்லை. எங்கேயோ ஹிமயமலைக் கப்பால் வெகுதூரத்திலிருப்பதாக நினைக்கிறோம். மற்ற காலங்களில் அவர்கள்ஞாபகமே நமக்குக்கிடையாது. கடவுள் சர்வ வியாபகர், அவரில்லாத விடங்கிடையாது, அதேமாதிரி குருநாதர்களும் எங்குமிருக்கிறார்கள் என்ற ஞாபகமும், நிச்சய புத்தியும் நமக்கேற்படவேண்டும். அவ்வித நிச்சய புத்தியானது ஹிருதய பூர்வமாக நமக்கேற்படுமானால் அப்போது நாம் அவர்களை மறக்கமுடியுமா?

ஆகையால் பேச்சில் மட்டும் பக்தியுள்ளவர்களாயிருக்காமல் நாம் அவர்களிடம் ஹிருதய பூர்வமான நம்பிக்கையோடிருந்து நாம் செய்யும் காரியங்களை யெல்லாம் அவர்களுடைய வேலையாகவும் நம்மையவர்களுடைய வேலைக்காரர்களாகவும் நினைத்துச் செய்துவருவோமானால் சமீப காலத்தில் வரப்போகிற மஹானால் அங்கீகரிக்கப் படுவோம். உண்மையான பக்தன் அல்லது போலிபக்தன் வெறும் பேச்சுக்காரன் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். தாம் வரும்போது தமக்குத் துணையாக நின்று வேலை செய்யக் கூடியவன் யாவன் என்பதை இப்போது முதற்கொண்டே அவர் கவனித்து வருகிறார். நம்மால் அவரை ஏமாற்ற முடியாது. அவரை ஏமாற்ற நினைந்தோமானால் நம்மை நாமே ஏமாற்ற நினைத்தவர்களாவோம். இறைவன் வருங் காலமோ சமீபித்து விட்டது, வாத்திய ஓசை கேட்கிறது, ஊருக்குள்ளும் வந்து விட்டார், நம்முடைய வீட்டிற்கும் வரப்போகிறார் எழுந்திருங்கள். தூங்காதீர்கள், விழித்துக் கொள்ளுங்கள்.

வி. அருணாசலம்.

---

## யாக்கை நிலையாமை.

---

ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச்சுட்டிட்டு
நீரினின் மூழ்கி நினைப் பொழிந்தார்களே

திருமந்திரம்.—(145).

## கல்வி கற்பித்தல்: ஒரு கைங்கர்யம்.

### அன்பு.

அன்பு என்னுங் குணமானது ஒருவனிடமிருக்குமாயின் அது மற்றெல்லா நற்குணங்களையும் அவனடைவதற்கு அவனைச் சக்தி யுள்ளவனுக்குமென்றும், அன்பில்லாமல் மற்றெல்லா நற்குணங்களையும் ஒருவனடைந்திருந்தாலும் அவைகள் போதுமானவை யல்லவென்றும்,குருநாதன் எனக்குப்போதித்தார். ஆகையால் தன்னிடம்அன்பு அதிகமாக மிகுந்திருக்கும் தன்மையைஒழுக்கத்தால்வெளியிடாதவொருவன்உபாத்தியாயராயிருக்கக்கூடாது. அவன் உபாத்தியாயராயிருக்கப் பிறரும் இடங்கொடுக்கக்கூடாது. ஆனலொருவன் உபாத்தியாயராயிருக்கத் தகுதியான அவ்வளவு அன்பு அவனிடம் இருக்கிறதா வென்பதை நாமறிந்துகொள்வதெப்படி? பால்யப் பருவத்திலேயே ஒரு பையன் ஏதாவதொருதொழிலில் புகுவதற்குதன்னுடைய இயற்கையான சாமர்த்தியங்களை வெளியிடுவதுபோல, ஒரு பையனிடம் சுபாவமாகவே மிகுந்திருக்கும் அன்பானது அப்பையன்உபாத்தியாயராயிருக்கத்தகுந்தவனென்றுசுட்டிக் காட்டும். மற்றப் பையன்களை வெவ்வேறு தொழில்களுக்குப் பழக்குவதுபோல அப்பேர்ப்பட்ட பையன்களையும் கல்வி கற்பித்தலாகிய தொழிலுக் கென்றே பழக்க வேண்டும்.

வெவ்வேறு விதமான தொழில்களில் நோக்கமுள்ள பையன்கள் சேர்ந்து ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். அவர்களின் பள்ளிக்கூட வாழ்நாட்கள் சந்தோஷகரமானவை யாயிருந்தால் மட்டும் அவர்கள் பின்னிட்டு பெரியவர்களாகும்போது சுதேச காரியங்களைக் கவனிப்பதற்கு உபயோகமுள்ளவர்களாவார்கள். ஒரு சிறு குழந்தை இயற்கையில் சந்தோஷத் தன்மையுள்ளது. வீட்டி

லும் பள்ளிக்கூடத்திலும் அச்சந்தோஷம் அபிவிருத்திய டைந்து வருமானால் பிறகு அவன் மற்றவர்களையும் தன்னைப்போலவே சந்தோஷமுள்ளவர்களாயிருக்கச் செய்பவனுவான். அன்பும் அநுதாபமும் நிறைந்த ஒரு உபாத்தியாயர் பையன்களை வசியப்படுத்தி அவர்கள் பள்ளியில் கழிக்கும் ஜீவகாலத்தை (வாழ்நாட்களை) சந்தோஷமுள்ளதாகச் செய்வார். "சிறுவர்கள் சுபாவமாகவே கற்றுக் கொள்வதற்கு ஆவலுள்ளவர்கள் என்றும், உபாத்தியாயர் அச்சிறுவர்களுக்கு சிரத்தையை யுண்டாக்கி அவர்களுடைய பாடங்களை விரும்பும்படி செய்யக்கூடவில்லையாயின் அவர் உபாத்தியாயர் வேலைக்குத் தகுந்தவர் அல்லரென்றும், வேறுவேலையை அவர் தேடவேண்டுமென்றும் எனது குருநாதன் ஒரு சமயத்தில் சொல்லியிருக்கிறார்.", மேலும் அவர் சொன்னதாவது: "என்னுடைய சிஷ்யர்கள் போதிப்பதற்கும், கைங்கர்யம் புரிவதற்கும் ஆசைப்படுகிறார்கள். அதிக பசியாயுள்ள ஒரு மனிதன் உணவை விரும்புவது போல அவர்கள் உதவி செய்வதற்குரிய சமயத்தை ஆவலுடன் விரும்புகிறார்கள். அவ்விதம் உதவிபுரியச் சமயம் எப்போது நேரிடுமென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களைச் சுற்றிலுமுள்ளவர்கள் பேரில் அன்பின் பிரவாகமானது கரை கடந்து செல்லும்படி அவர்களுடைய ஹிருதயத்தில் தெய்வீகத் தன்மை பொருந்திய அன்பானது அவ்வளவு நிறைந்திருக்கிறது. கல்வி கற்பிக்கும் தொழிலை சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட பரிசுத்தமான கடமையென மட்டும் நினைக்காமல் அது எல்லா இன்பங்களுக்கும் மேலானதென யார் கருதுகின்றனரோ, அவர்கள் தான் உபாத்தியாயராயிருக்கத் தகுந்தவர்கள்."

அநுதாப முள்ள ஒரு உபாத்தியாயர் சிஷ்யர்களுடைய எல்லா நற்குணங்களையும் பிரகாசிக்கும்படி செய்வார். அவருடைய சாந்த குணமானது மாணவர்களை அவரிடம் பயமடையாமற் செய்கிறது. அப்பொழுது

ஒவ்வொருபையனும் உள்ளதுஉள்ளபடி தன்னுடைய சுபா வங்களை வெளியிடுகிறான்; அப்படி வெளியிடும்போது உபா த்தியாயர் அவனுக்குப் பொருத்தமாயிருக்கும் மார்க்கத் தை நன்றாயறிந்துகொண்டு அம்மார்க்கத்தில் கல்வியைப் பயில அவனுக்கு ஒத்தாசை செய்கிறார். அப்பேர்ப்பட்ட உபாத்தியாயரிடம் ஒரு பையன் தனக்குள்ள கஷ்டங்க ளைத் தெரிவித்துக் கொள்வான். ஏனெனில் அவர் தன் னிடத்தில் அன்பையும் அநுதாபத்தையும் காட்டுவார் என் பது அவனுக்குத்தெரியும். அவர் தனக்கு ஒத்தாசை செய் வாரென்கிற நம்பிக்கை அவனுக்கிருப்பதால் அவரிடம் தன் குறைகளை ஒளிக்காது தெரிவிப்பதில் சந்தோஷமுடையவனு யிருப்பான். நல்ல உபாத்தியாயராயிருப்பவர் தன்னுடைய இளமைப்பருவத்தைஎப்போதும் ஞாபகத்தில் வைத்திருப் பாராகையால் அவர் தம்மிடம் வரும் பையன்களின் கஷ்டங் களை உணரக்கூடும். தன்னுடைய இளமைப் பருவத்தை மறந்துபோய் குழந்தைகளிடம் பரிதாபம் கொள்ளாமலி ருக்குமொருவன் அவர்களுக்குப் போதிக்கவாவது ஒத்தா சை செய்யவாவது தகுந்தவனல்லவென்று என் குருநா தன் சொல்லியிருக்கிறார்.

சிஷ்யனை ஆதரித்து அவனுக்கு ஒத்தாசை செய்யும் விஷயத்தில் ஆசிரியன் செலுத்தும் அன்பானது சிஷ்யனி டத்தில் அன்பை விருத்தியாக்குகிறது. அவன் தன் குரு வை நோக்கும்போது இவ்வன்பானது பக்தியாக மாறிவிடு கிறது. இவ்விதப் பையனிடம் உண்டாகும் பக்தியானது நாளடைவில் அவன் வளர்வதுபோல வளர்ந்து உத்தம குணவான்களை அறிவதும் பக்தியுடன் மரியாதை செய்வ துமான வழக்கங்களை அவனுக்குண்டாக்கி விடுகிறது. ஒரு வேளை காலக்கிரமத்தில் அது குருநாதனுடைய பாதத்தி லும் அவனைக்கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். மாணக்கனுக் குக் குருவினிடத்துண்டாகும் அன்பானது அவனைக் கீழ்ப்

படிதனுள்ளவனுகவும் அவர் சொற்படி அடங்கி நடப்பவனுகவும் செய்துவிடுகிறதாகையால் கண்டனே தண்டனேகளுக்கு அவகாசமே ஏற்படாது. குரு சிஷ்யர்களுக்குள்ள எல்லா சம்பந்தங்களேயும் கெடுப்பதற்குக் காரணமாயுள்ள பயமானது இதனுல் முற்றிலும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போகும். ஸத்குருநாதர்களுடைய சிஷ்யர்களாயிருக்கும் பாக்கியத்தைப் பெற்ற நாங்கள் இச்சம்பந்தம் எத்தன்மையதாயிருக்கவேண்டுமென்று அறிவோம். நாங்கள் தவறுதல்களேச் செய்த காலத்திலும் கூட அம்மகான்கள் எவ்வளவு ஆச்சரியகரமான பொறுமையோடும் அமரிக்கையோடும் கருணேயோடும் எங்களே ஏற்றுக் கொள்ளுகிருர்களென்பதை நாங்களறிவோம்.

அப்படியிருந்தபோதிலும் சாதாரண உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்குமுள்ள தாரதம்யத்தைக் காட்டிலும் எங்களுக்கும் எங்கள் குருநாதர்களுக்குமுள்ள தாரதம்மியம் மிகவும் அதிகம். குருதேவர்கள் உலக ரக்ஷணர்த்தமான கைங்கர்யங்களேப்புரிவதற்கு தாமே தீக்ஷை கொண்டிருப்பது போல, உபாத்தியாயர் தம்முடைய வேலேயை தேசத்தாருக்கு நன்மை செய்வதற்காகவே கொண்டிருக்கும் ஒரு உத்யோகமென்று நினேப்பாராயின், அப்பொழுது அவர் லோக கைங்கர்யமாக ஆசிரியத் தொழில் புரியும் மகான்களின் வகுப்பைச் சேர்ந்தவராவார். என்னுடைய அன்பிற்குரிய குருநாதனும் அவ்வகுப்பைச் சேர்ந்தவர். அவ்வகுப்பிற்குத் தலேமைஸ்தானத்தை வகித்திருக்கும் பிரபுவானவர் மனித வர்க்கத்திற்கும் தேவ வர்க்கத்திற்கும் பிரதம குருவாக விளங்குபவர்.

இந்த வழியில் அனேகம் பையன்களே வசப்படுத்த முடியாதெனச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அதற்குப் பதிலென்னவெனில், அத்தகைய பையன்கள் முன்னம் சரியானபடி நடத்தப்படாமல் கெடுக்கப்பட்டிருக்

கிறார்களென்பது தான். அப்படியிருந்த போதிலுங்கூட அவர்களிடம் அதிக அன்பு பாராட்டி மிகுந்த பொறுமை யுடன் அவர்களை நல்வழிப் படுத்தவேண்டும். இம்முறை யைக் கையாண்ட பொழுதெல்லாம் பலிதமாயிருக்கிறது அநுபவ சித்தம்.

இவ்விதம் அன்பு நிறைந்துள்ள பள்ளிக்கூடத்திற் பயிலும் பையன், வீட்டில் ஒரு நன் மகனாகவும் நற் சகோ தரனாகவும் ஆவதுமன்றித் தற்காலத்திலிருப்பது போல பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது களைப்பையும் ஊக்க மின்மையையும் அடைந்திராமல் வீட்டிற்கு வரும்போது உற்சாகத்தோடும் களிப்போடும் வருவான். அன்றியும் அவனுக்குத்தகுந்த வயதுவந்து குடும்பத்திற்குத் தலைவனா குங் காலத்தில் தான் ஆதியில் எவ்விதம் அன்பாக வளர்க் கப்பட்டானோ அவ்விதமே குடும்பத்திலுள்ளவர்களிடமும் அன்பு பாராட்டுவான். இவ்விதமாக ஒன்றின்பின் ஒன் றாக அநேகம் தலைமுறைகளில் இவ்வன்பானது விசாலித் துப் பாவித் தொடர்ந்துவரும். அப்படிப்பட்ட பையன் தான் தகப்பனாகும் பொழுது, மற்ற சொத்துக்களைப்போல பிள்ளையும் ஒரு சொத்தென்றும், பிள்ளையிருப்பது தகப்ப னுடைய நன்மையை யுத்தேசித்து மட்டுமென்றும், இப் போது பலர், சுயநலத்தையே கொண்டு, கருதுவதுபோலத் தன் பிள்ளைகளை நினைக்கமாட்டான். சில பெற்றோர்கள் குழந்தைகளுடைய நோக்கங்களைச் சற்றுங் கவனியா மல் நல்ல தொழில்களைச் செய்து குடும்பத்திற்குப் பொருளைச் சேர்ப்பதற்கும் நல்ல இடங்களிற் சம்பந் தங்களைச் செய்து தங்கள் குடும்பத்தின் செல்வாக்கை யும் கீர்த்தியையும் அதிகரிப்பதற்குமாக பிள்ளைகள் பிறந்திருக்கின்றனரென நினைக்கிறார்கள்; தன் மகனாக வந் திருக்கும் ஜீவனுக்கு, அது அபிவிருத்தி யடையும் பொரு ட்டு ஒத்தாசை செய்வதாகிய நற்கருமங்களைத்தான் செய் வதற்காகவே அச்சீவன் தன்னிடம் வந்திருப்பதாக எப்

போதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, மதியூகியாயுள்ள தந்தை, (தோளுக்குமிஞ்சினால் தோழன் என்பதற்கிணங்க) தன்மகனைச் சிநேகிதனைப்போற் பாவித்து, அவனுடன் கலந்து யோசித்து, அவனுடைய நோக்கங்களைச் சிரமப்பட்டு அறிந்து, அந்தப்படி அவன் நடப்பதற்குத் தனக்கேற்பட்டிருக்கும் மேலான அறிவு, அநுபவம் இவைகளுடன் தானும் அவனுக்கு ஒத்தாசை செய்கிறான். தன் மகனுடலானது சொற்ப வயதுள்ளதாக இருந்தபோதிலும், அச்சரீரத்தினுள்ளிருக்கும் ஆத்மாவானது தன்னுடைய ஆத்மாவைப்போல் விகாசமுறையில் அபிவிருத்தியடைந்தது என்பதை அவன் அறிவான். ஆகையால் அதைப் பிரியத்தோடும் மரியாதையோடும் நடத்தவேண்டு மென்பதையும் அவன் மறக்கமாட்டான்.

பெற்றோரும் உபாத்தியாயரும் முறையே வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் செலுத்து மன்பானது சிறிய பரோபகாரச்செயல்களாக முதலிற் பையன்களிடமிருந்து வெளிப்படும். இவ்விதமாக ஏற்படும் சிறிய பழக்கங்கள் முடிவில் தேசத்துக்கே பெருமையை யுண்டுபண்ணுகிற அதிசாகசமான உயர்ந்த பரோபகாரங்களாகப் பரிணமிக்கும்.

கொடுமையானது அன்புக்கெதிரிடையான பெரியபாபகுணமென்று குருநாதன் சொல்வதுடன், அறிந்துசெய்யும் கொடுமை அறியாமற் செய்யும் கொடுமையென, இருவகையாகப்பிரித்திருக்கிறார். அறிந்துசெய்யும் கொடுமையாவது, "மனப்பூர்வமாக மற்றொரு பிராணிக்குத் துன்பமுண்டாக்கக் கருதிச்செய்யும் கொடுமை, அது பாபங்களிலெல்லாம் கொடியது; மனிதன் செய்யும் வேலையல்ல, பைசாசகிருத்யம்." குழந்தைகளைப் பிரம்பாலடிப்பதும் இச்செய்கையில் சேர்ந்ததே; ஏனெனில் மனப்பூர்வமாகச் செய்யப் படும் கொடுமையைப் பற்றி அவர்சொல்வதாவது. "அநேகம் உபாத்தியாயர்கள் வழக்கமாக இக்கொடுமையைச் செய்கிறார்

கள்." பையன்களின் மனதை நோகச்செய்வதும், அவர்கள் மானத்தைப் பங்கப்படுத்தவும் கருதிய எல்லாச் செய்கைகளும் இக்கொடிய குற்றத்திற்சேர்ந்ததாகவே நாம் நினைக்க வேண்டும். சில தேசங்களில் எவ்விதமான சரீர தண்டனைகளும் கூடாவென்று தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அநேக தேசங்களில் அவ்விதத் தண்டனைகள் இன்னமும் வழங்கிவருகின்றன. இவ்விஷயமாக என் குருதேவன் சொன்னதாவது: "இச்சனங்கள் மிருகத்தன்மையானசெய்கைகளைச் செய்து வழக்கம் வழக்கமென்று சொல்லி அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். ஒரு குற்றத்தை அநேகர் செய்வதினாலேயே அது குற்றமாகாமற் போகாது.

வழக்கப்படி நானும் செய்தேனென்றால் கர்மம் அவர்களை விட்டுவிடாது. கொடுமையால் வரும் பாபம் எல்லாவற்றிலும் பயங்கரமானது. அஹிம்ஸை என்னும் தர்மத்தைப்பற்றிய கடமையை இந்தியாவிலுள்ளவர்கள் நன்றாயறிந்திருப்பதால் இந்தியர்கள் இவ்விதம் வழக்கமென்று போக்குசொல்லக் கொஞ்சமும் நியாயமில்லை."

பொதுவாக தண்டனை விதித்தல் என்ற எண்ணமே பிசகு; அதுமட்டுமல்ல. அது மூடத்தன்மையானது. தன் எண்ணப்படி கீழ்ப்படிந்து நடப்பதற்காக பையன்களைச் சில உபாத்தியாயர் பயமுறுத்துகிறார்கள். அப்பயத்தால் பையன்கள் அவரெதிரேமட்டும் கீழ்ப்படிதல் உள்ளவர்கள் போல் நடித்து அவர் தலை மறைந்தவுடன், அவர் சொல்லிய வொழுங்குகளை மீறி நடப்பதுமல்லாமல், அவரிடமுள்ள பிரியக்குறைவால் அவ்வொழுங்குகளை மீறி நடப்பதில் உற்சாகத்தையும் அடைகிறார்கள். ஆனால் பையன்களைத் தம்மிடம் அன்புள்ளவர்களாகச் செய்து தம்மைத் திருப்திசெய்வதற்காகவே தம் எண்ணம்போல் அவர்கள் நடக்கும்படி ஒரு உபாத்தியாயர் செய்வாராயின் அவர் இல்லாத காலத்

களிற்கூட பையன்கள் ஒழுங்காக நடந்து அவருடைய வேலையைச் சுலபமாக்குகிறார்கள். அறிவுள்ள உபாத்தியாயர் பையன்களுடைய குணங்களிற் பயத்தையும் வெறுப்பையு முண்டாக்காமல் அவர்களிட மன்பையும் வணக்கத்தையும் வளரச்செய்து தம்வேலையைச் சுலபமாக்கிக்கொள்ளுவது மன்றி அவர்களிடமுள்ள நற்குணங்களை உறுதிப்படுத்தி விகாசமுறையிலும் அவர்களுக்கு ஒத்தாசை செய்கிறார்.

மேலும் ஒரு துஷ்டப்பையனை நல்வழிப்படுத்த முயலாமல் அவனைப் பள்ளிக்கூடத்தை விட்டு நீக்கிவிட நினைப்பது பிசகு. மற்ற பையன்களுடைய நன்மையை யுத்தேசித்து ஒரு பையனை அவர்களிடமிருந்து பிரிக்கும்போதும் அவ்விதம் பிரிக்கப்படும் பையனுடைய நன்மையை மறந்துவிடக்கூடாது. எல்லா விஷயங்களிலும் பள்ளிக்கூடத்தின் ஒழுங்குகள் முற்றிலும் பையன்களுடைய நன்மையை உத்தேசித்தனவாக இருக்கவேண்டுமே யொழிய உபாத்தியாயரின் சிரமத்தைக் குறைக்கும் பொருட்டு ஏற்பட்டனவாயிருக்கக்கூடாது. அன்புள்ள உபாத்தியாயர் தன் சிரமத்தைக் கவனிக்கமாட்டார்.

அறியாமற் செய்யும் கொடுமையோ கவனமின்மையால் மட்டும் ஏற்படுகின்றது. ஆகையால் உபாத்தியாயர் ஜாக்கிரதையாயிருந்து, தன் வார்த்தைகளாலாவது செய்கைகளாலாவது அவ்விதக்கொடுமை நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். உபாத்தியாயர்கள் வேறு முக்கியமான வேலையைக் கவனிக்க முயலும்போதாவது அல்லது தமக்கேற்பட்ட ஒரு வருத்தத்தால் மனத்துயர மடைந்திருக்கும்போதாவது, யோசனையின்றிச்சிலகடுமொழிகளைக்கூறிப் பையன்களுக்கு மனவருத்தத்தை யுண்டாக்கிவருகிறார்கள்.

(இன்னும் வரும்)

யம். ஸ்வாமிநாதையர்.
மொழி பெயர்ப்பாசிரியர்

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

### குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துகள் தீண்டினபோதிலும், டைரக்ஷனிற் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்,

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொ வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைபட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் மோகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ. | 0—8—0 |
| டசன் 1-கு ரூ. | 5—0—0 |

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

## அவசியமான அபூர்வ ஔஷதங்கள்.

### ஓமத்திராவகம்.

இது வாந்திபேதி, பேதி, அக்னிமாந்தம், அஜீர்ணம், வயிற்றுப்புசம், அஜீர்ணத்தால் உண்டாகும் நெஞ்செரிவு, தலைநோய், வயிற்றுவலி முதலியவைகளுக்கு திறமான மருந்தாகும். ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய சிறந்த குடும்ப ஔஷதம் விலை (24 வேளை மருந்தடங்கியது) ½ ஔன்ஸ் சீசா 1-க்கு 8 அணா.

### தந்தவேதனுஹாரம்.

உலக பிரசித்தமான இந்த ஔஷதம் எப்பேர்ப்பட்ட கொடுமையான பல் நோயையும் உடன் சமிப்பிக்கத்தக்க பூர்ணசக்தியுடையது. விலை சீசா 1-க்கு 8 அணா. சிறியது 4 அணா.

### வதனகாந்தி.

அழகிய முகத்தின் காந்தியைக் கெடுத்து, மனக்கவலையையும் பார்க்க வெறுப்பையும் உண்டுபண்ணுகிற கெட்ட முகப்பருவை நீக்குவதில் சிறந்தது. முகத்திற்கு காந்தியை கொடுப்பது, சுகமான பரிமளத்தோடு கூடியது. சீசா 1-க்கு 4 அணா.

### ஆனந்தா—தந்தசூர்ணம்.

சிறந்த மூலிகைகளால் தயாரித்தும் பரிமளம் நிறைந்தும் அமைந்த இப் பல்பொடி பல்வலி, பல்சொத்தை, இரத்தம்வருதல், ஈர்வீக்கம், வாய்ப்புண் வாய்நாற்றம், முதலியவைகளை, தொலைத்து பற்களையும் ஈறையும் கெட்டிப்படுத்தி, வாக்குருசியையும், பரிமளத்தையும் கொடுப்பதே இதின் உபயோகத்தால் அடையும் பயன். விலை பெட்டி 1-க்கு 4 அணா.

### வழுக்கை விரோதி.

விருபமாகிய வழுக்கைத்தலையில் திருட மூலங்களோடுகூடிய புதிய ரோமங்களை உண்டாக்கி வளரவிடக்கூடிய சிரேஷ்ட ஔஷதம். சிரசுக்கு குளிர்ச்சியைக் கொடுப்பது. மனோஹரமான வாசனையோடு கூடியது விலை சீசா 1-க்கு 8 அணா.

### மூலரோக நாசகம்.

உள்மூலம், வெளிமூலம் முதலிய எப்பேர்ப்பட்ட மூலரோகங்களையும் குணப்படுத்துவதில் பேர்பெற்றது. விலை டின் 1-க்கு 12 அணா.

### சர்வ சிரேஷ்ட ரோமஸம்ஹாரி.

தேகத்தின் எப்பாகத்திலிருந்தும் அவசியமில்லாத ரோமங்களை தோலிற்கு, எரிச்சல், புண்முதலிய எப்பேர்ப்பட்ட கெடுதியும் செய்யாமல் நிமிஷத்தில் ரோமங்களை நீக்குவதில் சிறந்தது. ஹிதமான வாசனையோடு கூடியது. குணபாடத்தில் கூறியுள்ள சிரேஷ்ட மருந்துகளால் தயாரித்தது. விலை பெட்டி 1-க்கு 8 அணா. சிறியது (சீசா) 1-க்கு 4 அணா.

### வெள்ளி கில்ட்.

மின்சார சக்தியின் அறிவு தேவையில்லை. சுலுவில் 5-நிமிஷத்தில் கில்ட் கொடுக்கக்கூடியது. செம்பு, பித்தளை முதலியவைகளால் செய்த உங்கள் தட்டு, பீக்கான், கெடியாரம், முதலிய எல்லாவித சாமான்களையும் சயம் வெள்ளிக்கொப்பான பிரகாசத்தை மிக பளபளப்புடன் வீசச்செய்யும் "ரஜதநிப்பு" எவ்வித விஷச்சரக்கும் சேராதது. விலை சீசா 1-க்கு 1-ரூபா

முதல் தரம் காபூல்காயம் ரூபாயெடை 2 அணா. 6 ரூபாயெடை டின் 1-க்கு 5 அணா. 12 ரூபாயெடை டின் 1-க்கு 14 அணா.

ஷடிபஞ்சாப்(கோல்டன்)பொடி 12 ரூபாயெடை டின் 1-க்கு 14-அணா.

**P. A. Iyer,** ப. அ. அய்யர்,

*Pallavoor, Palghat, Malabar.* பல்லவூர் பாலக்காடு, மலபார்.